# என் வாழ்க்கைத் துணையோடு பேசும்போது என்ன சொல்வது?



CHRISTIAN QUESTIONS

# என் வாழ்க்கைத் துணையோடு

# பேசும்போது

# என்ன சொல்வது?

(Christian Questions
– வலையொலிப் பதிவு – நிகழ்வு # 1216 – தமிழாக்கம் )



**Copyright :**

*Christian Questions.com*

**Tamil Translated by :**

*www.foodfornewcreature.com*

# என் வாழ்க்கைத் துணையோடு பேசும்போது என்ன சொல்வது?

## *WHAT DO I SAY WHEN I TALK TO MY SPOUSE?*


***1 கொரிந்தியர் 13:4 (N A S B )* அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது.**

*நமது திருமண உறவை குறித்த புரிதலுக்கு நாம் வரும்போது, என் வாழ்க்கைத் துணையோடு பேசும்போது நான் என்ன சொல்வது என்ற கேள்வியைத் தவிர ஆழமான*



*புரிதலுக்குரிய கேள்வி எதுவும் இருக்கமுடியாது. வாழ்க்கையையே மாற்றிப்போடக்கூடிய திருமணத்தைக் குறித்த முடிவை எடுக்கிறோம். அப்போது அதன் மீது இருக்கும் ஆர்வம் மிகத் தெளிவானதும், திடமானதுமாய் இருக்கிறது. அதை ஒரு நிரந்தர ஆர்வமாகவே பார்க்கிறோம். காலம் கடந்துபோகும் போதோ இந்த உணர்ச்சிகரமான முடிவென்பது, நாம் அதிக கவனம் செலுத்தாத வாழ்க்கையின் ஒரு சாதாரண காரியமாக*


மாறிவிடக் கூடும். அப்போது, நமக்கு மிகவும் பொருத்தமான ஒரு செருப்பை அணிவது போலவும், நமக்கு விருப்பமான நாற்காலியில் உட்காருவது போலவும் நமது சௌகரியத்துக்காய் நாம் சார்ந்திருக்கும் வாழ்க்கையின் ஒரு காரியத்தைப்போல் இந்த திருமணம் மாறிவிடும். முதலில் புலமையோடு நுட்பமாய் இருந்த வார்த்தைகள் எல்லாம் நாட்கள் செல்ல செல்ல நமது வாழ்க்கைத் துணையோடு நாம் பேசும் போது, அவர்களுடைய அனுபவத்தின் மீது ஆர்வம் காட்டுவதை விட நமது சொந்த சௌகரியங்களை உறுதி செய்து கொள்ளும்படியான வார்த்தைகளாகவே பிரதிபலிக்க ஆரம்பித்துவிடுகிறது. இப்படிபட்ட கவலைக்குரியக் காரியம் அடிக்கடி நடந்து விடுகிறது; உண்மைதான்!




***Ric:*** நமது தலைப்பாகிய கேள்வி ஷாட் ஹெல்ம்ஸ்டெட்டர் *(Shad Helmstetter)* என்பவரின் “நீ உன்னுடன் பேசிக்கொள்ளும் போது நீ என்ன சொல்ல வேண்டும் ” என்கிற புத்தகத்தைப் படித்ததால் வந்த தாக்கமே. இதை, முதலில் நான் 30 வருடங்களுக்கு முன் படித்தேன், நமக்கு நாமே பேசிக்கொள்வதன் மூலம் கிடைக்கும் சிறந்த அறிவால்/புரிதலோடு, பிறரோடு சிறப்பாய் உரையாடுவது எப்படி என்பதைப் புரிந்துகொள்ள இப்புத்தகம் உதவியாக இருந்தது.

இந்தத் தொடர்ப் பதிவு விசேஷமாய் நமது வாழ்க்கை துணையோடான தெளிவான உரையாடல்களைக் குறித்தானது, இதன்மூலம் நமது திருமணத்தை இன்னும் மேலானதொரு நிலைக்குக் கொண்டு செல்லலாம். **அக்கறை மற்றும் உத்தரவாதம் மிகுந்த உரையாடலின்** அநேக நெறிமுறைகளை இங்கே நாம் பகிர்ந்துக்கொள்ளப் போகிறோம். பெரும்பாலான காரியங்கள் இந்த தொடரின் இறுதியில் முடிவுக்கு வரும், ஆனால் முதலில் சொல்லியிருப்பது ஒரு முன்னுரை மட்டுமே:

## அக்கறையும், அர்ப்பணிப்பும் மிகுந்த தொடர்பு/ கருத்துப் பரிமாற்றம்:



***நான் எனது வார்த்தை, செய்கை, மறைமுக அல்லது குதர்க்கப் பேச்சு மூலமாய் எனது வாழ்க்கை துணையோடு பேசுகிறேன், இதனால் முக்கியமானது என்று கருதும் எதை கவனத்தில் கொள்ள நான் தேர்வு செய்கிறேன். இந்த உரையாடல்களே எனது இதயத்தின் நிலைமையை வெளிப்படுத்தும். இவற்றை ஒப்புக்கொள்வதினால் நான் இப்போது எப்படி தோன்றுகிறேன்?***



*இப்படியாய் நம் வாழ்க்கைத் துணையோடு நாம் பல விதங்களில் உரையாடுகிறோம். இப்படியாய் உரையாடும் போது நாம் எப்படி தோன்றுகிறோம் என்று நம்மை நாமே பார்த்துக்கொள்ளக்கூடிய ஒரு வலைஒளி (PODCAST) கண்ணாடி இது.*

***ஆதி திருமணத்தின் மூலம் திருமணத்தின் கோட்பாடுகள் மிகவும் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கிறது.***

***(ஆதி:2:23-25: (KJV) "23- அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி எனப்படுவாள் என்றான்."***

***இந்த காரியத்தின் முடிவுரை திருமணத்தின் ஆழமான விதிமுறையை வெளிப்படுத்துகிறது:***

***24. இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான் cleave <1692>; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். 25. ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும், வெட்கப்படாதிருந்தார்கள்.***

***Cleave:* Strong's Exhaustive Concordance #1692 *dabaq; properly, to impinge, i.e. cling or adhere; figuratively, to catch by pursuit***

ஒருவர் ஒரு காரியத்தை அடைய தீர்மானிக்கும் போது, தான் அடைய நினைத்ததை பெற்றுக்கொள்ளும் வரை ஓய மாட்டார். இதையே தம்பதிகளிடம் தொடர்புபடுத்தும் போது, - நாம் இருவரும் ஒரே நபர் என்கிற நெருக்கத்தில் இருக்கும் படியாய் - என்றும் முடிவு பெறாத தொடர் முயற்ச்சியை நல்ல விதத்தில் எடுக்க வேண்டும்.

ஒரு மனிதனுக்கு **தன் தாயையும் தகப்பனையும் விட்டு பிரிந்து தன் மனைவியோடு இசைந்து** இருப்பான் என்பது ஒரு பெரிய வார்த்தை/காரியம். இசைந்து இருத்தல் என்பதன் அர்த்தம் அவன் தன் மனைவியோடு நெருக்கமாய் இருக்க அனுதினமும் முயற்ச்சி செய்ய/பாடுபட வேண்டும். இது தளராததொரு பற்றுதலைச் சுட்டிக்காட்டும்.

**இசைந்து இருத்தலின் மற்றோரு நன்மை:**

***யோசுவா:22.5 (K J V ) ஆனாலும் நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து, அவருடைய வழிகளிலெல்லாம் நடந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவரைப் பற்றிக்கொண்டிருந்து, <cleave 1692> அவரை உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் சேவிக்கிறதற்காக, கர்த்தரின் தாசனாகிய மோசே உங்களுக்குக் கற்பித்த கற்பனையின்படியேயும், நியாயப்பிரமாணத்தின்படியேயும் செய்யும்படி மாத்திரம் வெகு சாவதானமாயிருங்கள் என்றான்.***

இந்த வசனத்தில் இசைந்திருத்தல் என்பதற்குப் **பலமாய், மனப்பூர்வமாய்** தேவனை பற்றிக்கொண்டிருத்தல் என்று பொருள். நாம் தேவனோடு இசைந்திருத்தல் என்பதற்கு நாம் அவரது வழிகளை **பலமாய், மனப்பூர்வமாய்** பற்றிக்கொண்டிருத்தல் என்று பொருள். இருவரும் ஒருவராகும் வகையில் அவ்வளவு நெருக்கமாய் கணவன் தன் மனைவியோடு **பலமாய், மனப்பூர்வமாய்** இணைந்திருக்க வேண்டும் என்று தேவன் அறிவுறுத்துகிறார் . தேவனோடு எத்தனை நெருக்கமாய் இருப்பதற்கு முயற்ச்சிக்கிறோமோ அப்படியே நாமும் நமது

வாழ்க்கைத் துணையோடு அத்தனை நெருக்கமாய் இருப்பதற்கும் முயற்சிக்க வேண்டும்.

## அக்கறையும், அர்ப்பணிப்பும் மிகுந்த தொடர்பு/ கருத்துப் பரிமாற்றம்:



**ஆதியாகமத்தில் குறிப்பிட்டிருக்கும் தன் மனைவியோடு இசைந்திருத்தல் என்கிற எளிமையான விஷயத்தை என் வாழ்க்கைத் துணையோடும், இந்த ஒருமைப்பாட்டில் இருக்கும் ஒவ்வொருவரோடும் என் அனுதின வாழ்வில் தெரிவித்துக்கொண்டு இருக்கிறேனா?**

நமது திருமணத்தின் ஒருமனப்பாடு/ஒற்றுமை பிறர் கண்களுக்கு மிக தெளிவாக தெரிய வேண்டும். இந்தப் பொறுப்பான காரியத்தை மற்றவர்கள் மத்தியில் காட்சிப்படுத்த வேண்டும் ஏனெனில் சிலர் பொது இடத்தில் ஒரு விதமாகவும் தனிமையில் வேறு விதமாகவும் நடந்து கொள்ளக்கூடும். உதாரணத்திற்கு நமது வாழ்க்கை துணையைத் தவிர வேறு நபரோடு தவறான முறையில் பழகுவது நமது பொறுப்பற்ற மனநிலையையே வெளிக்காட்டும். ஆனால் திருமணத்தில் நமக்குள்ள பொறுப்பை பிறர்ப் பார்க்கும் போது, அதிலும் விசேஷமாய்த் தம்பதிகளின் இந்த ஒருமைப்பாட்டை வெளிப்படையாய் காட்டும் போது அவர்கள் நம்மை அணுகாமல் தனிமையில் விட்டு விடுவார்கள். ஆனால் மிகச் சிறிய அளவில் இப்படி முறையற்றுப் பழகுவதால் என்னத் தீமை வந்துவிட போகிறது? உண்மையில் ஆரம்பத்தில் இது எந்த பாதிப்பையும் உண்டாக்கவில்லை என்றாலும் நாளடைவில் அது நமது திருமண உறவுக்கும் வாழ்க்கைத் துணைக்கும் பாதிப்பை உண்டாக்கும் விதமாக நமது மனதையும், அன்பையும், உணர்வையும் தவறான திசைக்கு மாற்றிவிடும். இது நம் வாழ்க்கைத் துணையைப் பற்றிக்கொண்டிருப்பதாக அர்த்தமல்ல.



அநேகத் திருமணங்கள் விவாகரத்தில் முடிந்துவிடுகிறது மட்டுமன்றி திரளானவர்கள் சந்தோஷமாக இருப்பதும் இல்லை. இப்படிப்பட்ட துயரமும், பிரிவும், தோல்வியும் ஏற்படக் காரணம் என்ன? வாழ்க்கை ஓடுகிறது, வேலைகள் கிடைக்கின்றன, குழந்தைகள் பிறக்கிறார்கள், கடமைகள் நிறைவேறுகின்றன, தனிப்பட்ட விருப்பங்கள் உருவாகின்றன, சலிப்பு தட்டுகிறது, எதிர்பார்ப்புகள் நிறைவேறாமல் போகின்றன, நோய் வருகிறது, சோகமும் காயங்களும் ஏற்படுகின்றன, விரக்தி உண்டாகிறது, பொறாமை உண்டாகிறது, தவறான முடிவுகள் எடுக்கப்படுகிறது! நம்முடைய ஏதேதோ லட்சியங்களில் வாழ்க்கை கரைந்து போகிறது.



## இப்படிப்பட்ட பாழாக்கும்பட்டியல் இருக்கும் போர்க்களத்தில் போராட, கிறிஸ்தவர்களான நாம் என்ன செய்யவேண்டும்?

நமது வாழ்க்கைத் துணையோடு இசைந்து அல்லது பற்றிக்கொண்டிராத நிலையைக் குறித்து முதலில் பார்க்க ஆரம்பிக்கலாம். அன்பு, உறவுமுறை ஆகியவைகளைக் குறித்து நாம் நினைக்கும்போது முதல் வகை அன்பு, பெரும்பாலும் எப்போதுமே கவனத்தை ஈர்க்கும் மையமாகவே இருக்கும்: **“எரோஸ்”** எனும் கிரேக்க வார்த்தை.

***(ஆதாரம்: வேதத்தில் உள்ள நான்கு வகையான அன்பு thoughtco.com) எரோஸ் (உச்சரிப்பு :ஏர் –ஒஸ்) இந்த வார்த்தை கிரேக்க மொழியில் சிற்றின்பம், பாலின அன்பை அல்லது ஈர்ப்பை குறிக்கும். அன்பு அல்லது பாலின ஆசை, சரீரத்தின் மீதான ஈர்ப்பு மற்றும் உடல் ரீதியான கவர்ச்சிகளின் கடவுளுக்கான வார்த்தை. இதற்கு இணையான ரோம வார்த்தை “கியூபிட்“.***

*"எரோடிக்" என்பது இதில் இருந்து வந்தது தான். இதில் இருக்கும்* ***"எரொஸ்"*** *அல்லது சிற்றின்பம் உண்மையில் தவறான அர்த்தம் உடையது அல்ல. ஆனால் இது உண்மைக்கு மாறான எதிர்பார்ப்புகளை எளிதில் உருவாக்ககூடியது, இதயத்தை நொறுக்கிவிடும் நிலைக்கு வழிவகுத்து, அதன் மூலம் திருமண முறிவுக்கான காரியங்களைச் செய்துவிடும்.*

***எரொஸ் என்கிற வார்த்தை வேதத்தில் இல்லை, ஆனாலும் (சிற்றின்பம் என்கிற அர்த்தத்தில்) நல்லதும் கெட்டதுமாய் இதன் பாதிப்பு வேதத்தில் அநேக இடங்களில் இருக்கிறது:***

***உன்னதப்பாட்டு:1:2 (NASB): "அவர் தமது வாயின் முத்தங்களால் என்னை முத்தமிடுவாராக: உமது நேசம் திராட்சரசத்தைப்-பார்க்கிலும் இன்பமானது".***

*இது பாலியல் தொடர்பான ஒரு வேத வசனம். இதில் சரீர ரீதியான மிக அந்தரங்க உணர்வு நமக்கு உண்டாகும். சரியான சூழலில் இது நல்லதாகவே தோன்றும். ஆனால் தவறானதொரு சூழலில் இதுவே மிகவும் கேடுள்ளதாகிவிடும்.*

***எரொஸ் அல்லது சிற்றின்பம் குறித்த மற்றுமொரு உதாரணம்:***

***நீதி:5:18-20 (NASB): "18. உன் ஊற்றுக்கண் ஆசீர்வதிக்கப்படுவதாக; உன் இளவயதின் மனைவியோடே மகிழ்ந்திரு. 19. அவளே நேசிக்கப்படத்தக்க பெண்மானும், அழகான வரையாடும் போலிருப்பாளாக; அவளுடைய ஸ்தனங்களே எப்பொழுதும் உன்னைத் திருப்திசெய்வதாக; அவளுடைய நேசத்தால் நீ எப்பொழுதும் மயங்கியிருப்பாயாக. 20. என் மகனே, நீ பரஸ்திரீயின்மேல் மயங்கித் திரிந்து, அந்நிய ஸ்திரீயின் மார்பைத் தழுவவேண்டியதென்ன?"***

*உன் இளவயதின் மனைவியோடே மகிழ்ந்திரு.- இது கணவன் மனைவிக்கு இடையிலான உடல் ரீதியான மிக ஆரோக்கியமான உறவை குறிக்கிறது. கிறிஸ்தவ தம்பதிகளான நம் விருப்பங்கள் யாவும் வீட்டுக்குளேயே சந்திக்கப்பட வேண்டுமேயொழிய வெளியில் அல்ல. நமது சிந்தனைகள்*




யாவுமே வேறு எவர் மீதும் இல்லாமல் எப்போதும் நம் வாழ்க்கை துணை மீதே இருப்பதில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இந்த உலகத்தில் இதைச் சொல்வது எளிது, ஆனால் செயல்படுத்துவதோ மிக கடினம். இதே பிரச்சனை வேதாகம காலத்திலும் எழுந்திருக்கிறது. வெற்றிகரமான கிறிஸ்தவ திருமணத்தில் வாழ்வது என்றால் இவைகளை மட்டுமன்றி, அதற்கும் மேலாய் சரீர சபலத்தால் நிகழும் பாவக் காரியங்களை எல்லாம் கூட தெரிந்து வைத்திருக்கவேண்டும்.

**எரொஸ்** அல்லது சிற்றின்பம் என்பது ஒரு கிறிஸ்தவத் திருமணத்தின் அடிப்படை ஆதாரம் கிடையாது. இருப்பினும் பொறுப்புள்ள தம்பதிகள் இடையே திடமான உறவை ஆதாரமாகக் கொண்டதன் பலனாகத் தொடர்ந்து உருவாகும் ஒரு காரியமாகவே இது இருக்கலாம் அல்லது இருக்கவேண்டும்.

## அக்கறையும், உத்தரவாதமும் மிகுந்த தொடர்பு/ கருத்துப் பரிமாற்றம்:



***என் வாழ்க்கைத் துணையுடன் எனது சரீரத்தின் பாலின தேவைக்கான விருப்பங்களை பகிர்ந்துகொள்ளக் கூடிய அளவுக்கு எனது கருத்து பரிமாற்றம் ஆரோக்கியமானதாக இருக்கிறதா? அப்படி இல்லை என்கிற பட்சத்தில் அவ்வித பரிமாற்றத்தை உருவாக்க நான் முயற்சிக்கிறேனா?***

இதில் அநேக காரியங்கள் இருப்பதால் நாம் இதை எளிதாய் எடுத்துக்கொள்கிறோம். நாம் இதற்கு ஒரு முக்காட்டை/ திரையைப் போடவேண்டும். அப்போதுதான் தேவனால் கனமுள்ளதாய் காணப்படுவது மட்டுமன்றி, சந்தோஷத்துக்-குரியதுமானதொரு திருமண வாழ்வை கட்டி எழுப்புவத்தில் நாம் கவனத்தைச் செலுத்த முடியும். இது சாத்தியமான ஒன்று தான்!

*சில நேரங்களில் மிகச் சிறிய காரியங்களில் தான், மிகப் பெரிய நம்பிக்கை காணப்படும். நாம் வாழ்க்கைத் துணையோடு இசைந்து இருப்பது என்றால் என்ன என்பதை உணர்ந்துகொண்டு அதையேச் செய்யவேண்டும்!*

***இத்தனை நேரம் வாழ்க்கைத் துணையோடு இருக்கக்கூடிய முழுமையானப் பரிமாற்றத்தின் அவசியத்தைக் குறித்துப் பேசினோம், எனவே அதை உண்மையில் எப்படி செய்வது ?***

*தம்பதிகளுக்கானக் கருத்துப் பரிமாற்றத்தின் மீது நாம் கவனம் செலுத்துகையில், இதற்கான நமது முயற்சிகளின் தரத்தை அடையாளம் காண்பதற்கு நுழைந்து பார்க்க உதவும் மிக முக்கியமான காரியங்கள் இரண்டு இருக்கின்றன:*

*1. முதலாவது **என்ன** விதமான வார்த்தைகள் அல்லது செயல்களை உபயோகிக்கிறோம்? இதன் மூலம் நாம் எதன் மீது கவனம் செலுத்துகிறோம்? நமது நோக்கம் எப்படிப்பட்டது?*

*2. இரண்டாவது இதை **எப்படிச்** செய்கிறோம்? கருத்துக்களை நாம் எப்படி வெளிப்படுத்துகிறோம்? கோபம், பொறுமையின்மை, எரிச்சல், கைவிட்டு ஒதுங்கிவிடுவதன் மூலமா? அல்லது அன்பு, இரக்கம், கருணை, அக்கறை செலுத்துவதன் மூலமா?*




***முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது***

*கருத்துக்களைப் பரிமாற உங்கள் உணர்வுகள் மிக முக்கியமானது. எதைப் பரிமாறிக் கொள்ளவேண்டும் என்பது அதிமுக்கியமானது. இதில் ஏதாவது ஒன்றை விட்டுவிட்டு மற்றொன்றைச் செய்வது என்பது அறிவற்றச் செயல்.*

*நமது உணர்வுகள் இதில் முக்கியமானது தான். ஆனால், முக்கியமானது எது என்பதே ஒரு மாறுபட்ட விஷயம்.*

*நாம் எப்படி உணர்கிறோமோ அதையே கருத்துப் பரிமாற்றம் செய்து பார்க்க ஆரம்பிக்கலாம்:*

***முதலாவது என்ன விதத்தில் கருத்தை பரிமாறுகிறோம்:*** *என் வாழ்க்கைத் துணையோடு ஏதோ ஒரு காரியத்தைக் குறித்து நான் கோபமாக அல்லது சலிப்புடன் அல்லது கைவிட்டு ஒதுங்கும் நிலையில் இருக்கிறேனா? அப்படியானால் நான் அவர்களுக்கு ஆம் என்று (அ) சம்மதம் சொல்லிவிடலாமா?*



**தம்பதிகளான நீங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாத போது பிசாசு உங்கள் இருவரிடமும் பேசிக்-கொண்டிருக்கிறான்** **– "யாரோ சொன்னது"**

*ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்வது என்பது மிக மிக முக்கியமானது அதிலும் விசேஷமாய் எதைக் குறித்தாகிலும் கவலை கொள்ளும் போது அல்லது கோபமாய் இருக்கும்போது.*

***இப்படிப்பட்டக் காரியங்களைப் பரிமாறிக்கொள்ளும்போது, அது வேதாகம கொள்கைகளின் அடிப்படையில் இருப்பது, மிகச் சிறந்ததாக இருக்கும்:***

***எபேசியர்: 4:25-27 (NASB): "25. அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களா யிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன். 26. நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது; 27. பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்"***

நமது மனதில் இருப்பதை நாம் துணைவரோடு கட்டாயம் சொல்லிவிட வேண்டும். அது அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்; நாம் அதை அவர்களுக்கு தெரியப்படுத்தி இருக்க வேண்டும். தாமதப்படுத்தாமல் கூடியமட்டும் உடனுக்குடன் தெரிவித்து விடுங்கள் . இது ***சமாதானம் செய்துகொள்ளவும், சமாதானத்தைக் காத்துக்கொள்ளவும்*** வழிவகுக்கும். வரும் தொடரில் இதற்குள்ள வேறுபாட்டை நாம் குறிப்பிடுகின்றோம்.

***சமாதானத்தைக் காத்துக் கொள்வது*** என்பதை தம்பதிகள் அடிக்கடி செய்து கொள்ளுவார்கள். கருத்துவேறுபாடு இருந்தாலும் சமாதானமாய் இருக்கவேண்டும் என்பதற்காகவே விஷயத்தைக் கிடப்பில் போட்டுவிட்டு தங்கள் சொந்த வழியில் அவரவர் இதைக் குறித்துச் சிந்திக்கலாம் என்று கருதுகிறார்கள். இப்படியே மேலும் மேலும் செய்துகொண்டே போனால் காலப்போக்கில் அதுவே பழக்கமாகிவிடும். ***சமாதானம் செய்துகொள்வது என்பதோ*** சற்று வேறுபட்டு-இருவருக்கும் இடையிலான தடைகளை உடைத்தெறிந்து, எதற்கு இவ்விதமாய் இருவரும் வேறு வேறு வகையில் சிந்திக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க உதவும். இப்படி செய்வது பலமானப் பிணைப்பை ஏற்படுத்தும் வகையான, நல்லதொரு கருத்து பரிமாற்றத்துக்கு வழிவகுக்கும். கொஞ்சம் கடினமான வேலைதான் என்றாலும், அதிருப்திக்கு வழிவகுக்கும் ***சமாதானத்தை காத்துக் கொள்வதை*** போன்ற ஒன்று அல்ல... ***சமாதானம் செய்துகொள்வது*** என்பது ஒரு முன்னேற்றத்திற்கும் பெரிதான புரிந்துகொள்ளுதலுக்கும் வழிநடத்தி, திருமண பந்தத்தை இன்னும் நெருக்கமாகிவிடும்.



***இரண்டாவதாகப் பார்க்கவேண்டியது நமது கருத்துப் பரிமாற்றம் எப்படிப்பட்டதாக இருக்கிறது:*** *மேலே ஏற்கனவே கூறியவண்ணம் பெரும்பாலான சமயங்களில் வாழ்க்கைத் துணையோடான நமது உரையாடல்கள், அவரை விரட்டி அடிக்கும் விதமான பொறுமையின்மை, எரிச்சல் போன்ற தவறான உணர்ச்சிகளுடனேயே இருக்கிறது. இது இப்படியே தொடரும் பட்சத்தில், உறவில் பாதிப்பு உண்டாகிவிடுமே அன்றி, உறவை சரி செய்துவிடாது.*

***இங்கும் நமக்கு வேதத்தின் வழிகாட்டுதல் தேவைப்படுகிறது. வேதத்தின் வழிகாட்டுதல் அவசியம் இல்லை என்று நமது வாழ்வில் ஒருநாளும் சொல்லமுடியாது:***

***எபேசியர்:4:29 (NASB): "29. கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவனுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்".***

*அன்பு: தன்னலமற்ற அன்பு மட்டுமே இந்த வசனத்தின் படி, வாழவும் அதைக் குறித்து பேசவும் தூண்டக்கூடியது:*

- ***ஆரோக்கியமற்ற*** *(கேடுள்ளதும், பாழாக்கக்கூடியதுமான)* ***வார்த்தைகளை*** *அல்ல ஆனால் நல்லமுறையில் பலன் அளிக்கக்கூடிய (கட்டமைக்க கூடிய, ஸ்திரப்படுத்தக்கூடிய) வார்த்தைகளையேப் பேசவேண்டும். மன அமைதி குலைந்த நிலையில் நாம் இருந்தாலுமே நல்ல, சக்திவாய்ந்த, மேலும் கட்டமைக்கக்கூடிய*
- *சூழ்நிலையின் தேவைக்குத் தகுந்தப் பயனுள்ள வார்த்தைகளையே பேசவேண்டும்; கொந்தளிக்கும் வார்த்தைகளை அல்ல; மதிப்புமிக்கவைகளையே பேசவேண்டும்.*
- *நமது பேச்சின் முடிவு, கேட்பவருக்கு நேர்த்தியானதாக இருக்கவேண்டும். உண்மையில் நாம் கடும் கோபத்தில் இருக்கும் போது நிச்சயம் இது ஒரு சவாலாகவே இருக்கும். நாம் கோபத்தில் இருக்கும் போது நேர்த்தியான*

வார்த்தைகளைப் பேசும்படி எதிர்பார்க்கப்படுகிறோமா? கோபத்தில் நம் முகம் சிவந்து ரத்த அழுத்தம் உச்சத்தில் இருக்கும்போது நம்மால் நேர்த்தியான வார்த்தைகளை எப்படிப் பேசமுடியும்? இதற்கு ஒரு வழி இருக்கிறது, ஆனால் அதற்கு நம்மை கண்ணாடியில் பார்க்க வேண்டியது அவசியம்.

பக்குவமான வார்த்தைகளை பேச சில ஆலோசனைகள் :

| இப்படிச் சொல்வதற்குப் பதிலாக | இப்படிச் சொல்ல முயற்சிக்கலாம் |
| --- | --- |
|  |  |
| நீங்கள் தான் என்னை நிதானம் இழக்கச் செய்துவிட்டீர்கள்; | ‘நான் பார்த்த போது, நீங்கள் சொல்லும்போது கேட்டது |
| நீங்கள் எப்போதுமே இப்படிதான்; நீங்கள் ஒருபோதும் சரியில்லை | உங்களைப் பார்க்கும்போது நான் எரிச்சல் அடைகிறேன் |

இதில் இருக்கும் வேறுபாடு என்ன? இரண்டு உதாரணங்களிலும் இருக்கும் இரண்டாவது மறுமொழியில் நமது வாழ்க்கைத் துணையை குற்றப்படுத்துவதற்கு பதிலாக எதிர்தாக்குதலில் நமது நிலையற்ற தன்மைக்கு, நாமே பொறுப்பெடுத்துக் கொள்கிறோம். கருத்து வேறுபாடு அடுத்தக்கட்டத்திற்குப் போவதற்கான காரணத்தை நாமே நம் மீது ஏற்றுக்கொள்கிறோம். எந்த ஒரு விஷயத்துக்கும் நமது மறுமொழியை அல்லது பதிலை சொல்வதற்கான முன்னுரிமை எப்படி ஆயினும் நம்மிடம் தானே இருக்கிறது, இதைக் கடுமையாய் கையாள்வதோ அல்லது கருணையுடன் கையாள்வதோ நமக்கான உரிமை அல்லவா! நமது வாழ்க்கை

*துணையின் செயலோ, சொல்லோ நம்மைத் தூண்டிவிடக்-கூடியதாகவே இருந்தாலும் - அதற்கு எப்படி செயல்படுவது என்று தீர்மானிப்பது நம் கையில் தானே இருக்கிறது. பழியை அவர்கள் மேல் போடுவதற்குப் பதில் அதை நம்மீதே சுமத்திக்கொள்கிறோம்; இதுவே காரியத்தைக் கருணையுடன் கையாள்வது. இப்படி செய்வதை நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், இது நமது கட்டுப்பாட்டில் இருக்கும் பட்சத்தில், வாக்குவாதம் அடுத்தக்கட்டத்தை நோக்கி முன்னேறுமாகில் அது நம்முடைய தவறுதான்.*

**எப்படிக் கருத்துப்பரிமாற்றம் செய்வது என்பதற்கான மேலும் ஒரு வேதாகம வழிகாட்டுதல்:**

***எபேசியர்: 4:31-32 (NASB) " 31. சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது. 32. ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.***

*மற்றெந்த கிறிஸ்தவரிடமும் தயவுடன் நடந்துகொள்வது போலவே, நமது வாழ்க்கைத் துணையுடனும் நடந்துகொள்வோமாக. இரக்கத்தோடும், கனிவான இருதயத்தோடும், மன்னிக்கும் தன்மையோடும் நாம் இருக்கவேண்டும். நாம் கோபத்தால் சமநிலை இழந்திருந்தால் நாம் அதை தெரிவித்து விடவேண்டும். ஆனால் அதேசமயம் கோபத்துக்கான காரணத்தை அவர்கள் மீது சுமத்துவதற்கு பதிலாக, அந்தப் பொறுப்பை நம் மீதே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது மிக முக்கியமானது.*

## அக்கறையும், அர்ப்பணிப்பும் மிகுந்த தொடர்பு/ கருத்துப் பரிமாற்றம்:



**வேதத்தின் தெளிவான அடிப்படையில் கிறிஸ்துவின் சரீர அங்கத்தினருக்கு நான் கொடுக்கும் அதே மரியாதையை- எனது வாழ்க்கைத் துணைக்கும் எந்த ஒரு சூழ்நிலை யிலும் அவர்கள் சரியாகவோ தவறாகவோ இருப்பதைக் கண்டாலும் நான் கொடுத்தே ஆகவேண்டும்.**

*கிறிஸ்துவின் அங்கங்களின் மீது காட்டும் அதே அக்கறையையும், மரியாதையையும் நமது வாழ்க்கைத் துணை மீதும் நாம் காட்டவேண்டும். இதுவே நமது கருத்துப் பரிமாற்றத்துக்கான மிக முக்கியமான அடிப்படை..*

*என்னக் கருத்தை நாம் பரிமாறிக்கொள்கிறோம், அதை எப்படி பரிமாறுவது என்றும் இதுவரை நாம் பார்த்தோம். இதில் மிகவும் முக்கியமான காரியம் எது ?*



**நாம் எப்படி உணர்கிறோம் என்கிற விஷயம் முக்கியமானது அல்ல, நமது வாழ்க்கைத் துணை நமக்கு எவ்வளவு விசேஷமானவர் என்பதுதான் இதில் முக்கியம்!**

*கொஞ்சம் பொறுங்கள். என்ன? எப்போது நாம் கோபமாக இருக்கிறோமோ அப்போது, அந்தக் கோபம் மட்டுமே மிகவும் முக்கியமானதாக நமக்குத் தோன்றும். ஆனால் நமது திருமண உறவு, அதைவிட முக்கியமானது. எனவே நமதுக் கோபத்தை இந்த முக்கியத்துவத்துக்கான இடத்தில் வைத்துப் பார்க்கவேண்டும். அப்படியானால் இதன் அர்த்தம் என்ன?*

*நம் வாழ்க்கைத் துணையுடன் நாம் எப்படிப் பேசுகிறோம்*

*என்பதை நாம் கையாள்வதற்கு, நமது கிறிஸ்தவ திருமணத்தின் பரிசுத்த உடன்படிக்கைக்குள் நமக்கிருக்கும் தனிப்பட்டப் பொறுப்பை நாம் நினைவு கூற வேண்டும்:*

***எபேசியர்:5:21-23 (N A S B) "21. தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள். 22.மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். 23. கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்."***

*இந்த வசனங்களைப் பொதுவானக் கண்ணோட்டத்தோடு உள்ளும், புறமும் பார்த்தோமாகில், அவ்வளவு நல்லதாகத் தோன்றாது; பெண்களைச் சரியாக நடத்துவதுபோல் இருக்காது. இது ஒரு நியாயமற்ற, கலகத்தை உண்டுபண்ணும் விதமான, உரிமைக்குரல் எழுப்பவேண்டிய சூழ்நிலையை உருவாக்கக்கூடிய ஒன்று போலவும் தோன்றும்! எனவே இதை முறைப்படி புரிந்துகொள்வோம். இங்கே கருத்துப் பரிமாற்றம் என்கிறப் பதத்தில் ஒரு அழகானப் பாடம் இருக்கிறது. இங்கே முதல் வசனத்தில்* ***"மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்"*** *என்றிருக்கிறது. இதன்படி நாம் அனைவருமே கர்த்தருக்குக் கீழ்ப்படியவேண்டி இருக்கிறது.*

***தங்கள் மனைவிகளை நேசிக்கும் ஒரு கிறிஸ்தவனின் கடமைக் குறித்து, இதில் கணவன்மார்களுக்கு மிக தெளிவாக போதிக்கப்படுகிறது.***

***எபேசியர் 5:25, 28-29,31 (N A S B) "25. புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு<25>கூறுங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு<25>கூர்ந்து; 28. அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்பு<25>கூறவேண்டும்; தன் மனைவியில் அன்பு<25>கூறுகிறவன் தன்னில் தான் அன்பு<25>கூருகிறான். 29. தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனு மில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் <2282>காப்பாற்றுகிறான்."***

*எவ்வளவு மதிப்பு மிக்கதாய் நெஞ்சாரப் போற்றுகிறோம் என்கிற புரிதலில் தான், நமது வாழ்க்கைத்துணையின் மீது நாம் வைத்திருக்கும் மதிப்பீட்டின் திறவுகோலே இருக்கிறது.*

*நம்மில் ஒருவருமே தமது சொந்த சரீரத்தை வெறுப்பதில்லை. அதற்கு பதிலாக, அதன் மீது அக்கறை உள்ளவர்களாகவே இருக்கிறோம் என்று இந்த வசனத்தில் நமக்கு சொல்லப்படுகிறது. நமது சரீரத்தில் ஏதாவது வலி ஏற்பட்டால் அதை கரிசனையுடன் கவனிக்கிறோம்; காயத்தைக் கட்டுகிறோம்; தேய்த்துவிடுகிறோம்; எல்லாவிதத்திலும் பராமரிக்கிறோம். இதையே நமது வாழ்க்கைத் துணையிடமும் மிகுந்த கனிவான அன்புடன் செய்கிறோம்; சீராட்டி ஆதரிக்கிறோம் (உற்சாகப்படுத்துதல் அல்லது ஊக்குவித்தல்).*



*எபேசியர் 5இல் 6 காரியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் ஒன்று மட்டுமே பெண்களுக்கானது. ஒருவேளை தவறை சுட்டிக்காட்டுதல் என்பது ஆண்களுக்கு திரும்பத்திரும்ப அவசியம் போல் தோன்றுகிறது.*

- *பெண்கள்: கணவர் மீது அன்பு கூறுங்கள்; அவருக்கு கீழ்ப்படியுங்கள்*

- ***ஆண்கள்:*** *மனைவி மீது அன்பு கூறுங்கள்; அவளுக்காய் உங்களை விட்டுக்கொடுங்கள்*

- ***ஆண்கள்:*** *மனைவியை உங்கள் சொந்த சரீரங்களாகப் பாவியுங்கள்.*

- ***ஆண்கள்:*** *உங்கள் மனைவி மீதுள்ள அன்பு, உங்களை பாதுகாத்துக் கொள்ளும் வழிமுறையாக மாறிவிடும்.*

- ***ஆண்கள்:*** *உங்கள் மனைவியை போற்றிப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.*

- ***ஆண்கள்:*** *மற்ற பந்தங்கள் யாவற்றையும் அவளுக்காய் விட்டுவிடுங்கள்.*

*பெண்கள் தங்கள் கணவருக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று பார்க்கிறோம். மற்றெல்லா காரியங்களும் கணவன்மார்கள் செய்ய வேண்டியவைகளாகவே இருக்கின்றன. ஏனெனில் மனைவி கீழ்ப்படிந்திருக்க கணவன் தகுதியானவராக இருக்கவேண்டி உள்ளது. மனைவிமார்கள் தன்னிடம் மிகத்தெளிவான அன்புகொண்டு, மதிப்பளித்து, போற்றிப் பாதுகாப்பவரிடம் தங்களையே கொடுத்துவிட விரும்புகின்றார்கள். கிறிஸ்தவ திருமண வாழ்க்கை என்பது இப்படிப்பட்டதாகவே இருக்க வேண்டியுள்ளது.*

***தங்களுடைய மனைவிகளின் முக்கியத்துவத்தை கணவன்மார்களுக்கு முழுவதுமாய் கூறிவிட முடியாது:***

***I பேதுரு:3:7 (KJV): "7. அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன<772> பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களான-படியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச்<5092> செய்யுங்கள்".***

***கனம் : ஸ்ட்ராங்'ஸ் எக்ஸ்ஹாஸ்டிவ் கன்கார்டன்ஸ் (Strongs Exhaustive Concordance) <5092> = மதிப்பு***

**பலவீனம் / வலுவற்ற : ஸ்ட்ராங்'ஸ் எக்ஸ்ஹாஸ்டிவ் கன்கார்டன்ஸ் *(Strongs Exhaustive Concordance) <772>* = வலிமையற்ற**

*கனம் அளிப்பது என்பது, "மரியாதையுடன், அதிலும் உச்சகட்ட அளவிலான மரியாதையுடன் நடத்துவது". உங்கள் மனைவிக்கு உயர்ந்த மதிப்பை கொடுங்கள்; உங்களுக்கு மிகவும் விலையேறப்பெற்றதாய் காணப்படும் ஏதோ ஒன்றுக்கு கொடுக்கும் மதிப்பை விட மேலான - ஆனால் மிகவும் நுட்பமான மதிப்பை கொடுங்கள். மற்றெவரைக் காட்டிலும் அதிகமாய் பாதுகாத்து, கனப்படுத்தி, மரியாதையுடன் நடத்துங்கள் - அவளை போற்றிப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்! தங்கள் மனைவியை மகிழ்ச்சியுடன் வைத்து அக்கறையாய் கவனித்துக்கொள்ள வேண்டும் என்பதை கணவன்மார்கள் ஒரு போதும் மறந்து விடக் கூடாது. இது ஒரு உயர்தர வாழ்க்கை முறையாகும்!*




***கிறிஸ்துவின் சரீரத்தில் முக்கிய/சரியான பங்கு வகிக்காதவர்களை கனப்படுத்தும் இந்த கோட்பாட்டைக் கீழுள்ள வசனப்பகுதி காண்பிக்கிறது:***

***1 கொரி:12:22-23 (ASV): "22. சரீர அவயவங்களில் பலவீன <772> முள்ளவைகளாய் காணப்படுகிறவைகளே மிகவும்***

**வேண்டியவைகளாயிருக்கிறது.** *23.* **மேலும், சரீர அவயவங்களில் கனவீனமாய்க் காணப்படுகிறவைகளுக்கே அதிக கனத்தைக் *<5092>* கொடுக்கிறோம்; நம்மில் இலட்சணமில்லாதவைகளே அதிக அலங்காரம் பெறும்.”**

*கிறிஸ்துவின் சரீரமாய் நம்முடன் இருப்பவர்களை நாம் கனப்படுத்த வேண்டியது அவசியமாய் இருக்கும் போது, நமது திருமணத்தின் மூலம் அன்புசெலுத்தும்படியாய் உடன்படிக்கை செய்துகொண்டவரை நாம் கனப்படுத்த எப்படி முடியாமல் போகும்?* ***I பேதுரு: 3:7*** *இல் சுட்டிக்காட்டிய அதே வசனமே இங்கும் உபயோகிக்கப்படுகிறது. அதிக பெலவீனமுள்ளவர்களை கனப்படுத்துவது நமது திருமணத்திற்கு நல்லதொரு உதாரணம் / எடுத்துக்காட்டு. சரீர அவயவங்களில் கனவீனமாய்க் காணப்படுகிறவைகளுக்கே அதிக கனத்தைக் கொடுக்கிறோம். நமது திருமண உறவிலும் அதே போலத்தான்!*

## அக்கறையும், அர்ப்பணிப்பும் மிகுந்த தொடர்பு/ கருத்துப் பரிமாற்றம்:



***எனது வாழ்க்கை துணையின் அசாதாரண மதிப்பை உண்மையோடும், மனசாட்சியோடும் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டே இருப்பது என்பது என் உணர்வுகளை வெளிப்படுத்தும் வேளையில் அதுவே என் வாழ்வின் உயிர்நாடிபோன்ற அடிப்படை காரியமாக இருக்கிறது. அவர்கள் தங்களது தரத்தை /மதிப்பீட்டை கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். நாம் அதை அவர்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.***

*இது மிக மிக முக்கியமான ஒரு காரியம். நாம் ஒருவருக்கொருவர் வருத்தத்தில் அல்லது சங்கடத்தில் இருக்கும்போது - அவர் நமக்கு எவ்வளவு விலைமதிப்பு உள்ளவராய் இருக்கிறார் என்பதை நாம் நமது வாழ்க்கைத் துணையிடம் சொல்லுவதை அவர் கேட்க வேண்டும், அதே*

*உண்மையை நம்மிடமும் அவர்கள் நினைவு படுத்த வேண்டும். இதைத் தான் வேதம் நமக்கு கற்றுக்கொடுக்கிறது.*

*வேதாகமக் கொள்கைகளை செயல்படுத்துவதன் மூலம் அது நமது திருமண உறவின் போராட்டங்களை (அ ) சவால்களை நாம் எப்படி கையாள்கிறோம் என்பதன் மீது மீண்டும் கவனம் செலுத்துகிறது. அதை செயல்படுத்த போவோம் வாருங்கள்!*

***மிக உறுதியான கருத்துப் பரிமாற்றம் என்பது, திருமணத்தில் அதிமுக்கியத்துவம் வாய்ந்தது. அது அவ்வப்போது கடினமானதும் கூட.. இதை எப்படி முன்னுரிமையுள்ள அல்லது முக்கியத்துவமான ஒன்றாய் வைத்திருப்பது?***

*நாம் கேட்கக் கூடிய மிக முக்கியமான கேள்வியாய் இது இருக்கும். நல்ல முறையான கருத்துப் பரிமாற்றம் இல்லை என்பதை அடையாளம் கண்டுகொள்வது ஒரு காரியம் என்றாலும், அதைக் குறித்து என்ன செய்வது என்று யோசிப்பதும் மற்றொரு காரியம். - இதனிடையில் வாழ்க்கை எவ்வளவு பரபரப்பாகவோ அல்லது எளிமையாகவோ மாறிவிட்டாலும் கூட, வாழ்க்கைத் துணையோடுள்ள கருத்துப் பரிமாற்றம், துடிப்போடு இருப்பதற்காக தொடர்ந்து சரியானக் காரியத்தை செய்துகொண்டே இருப்பது என்பதும் அவசியமான ஒன்று.*

*வாழ்க்கைத் துணையோடு நமது கருத்துப் பரிமாற்றத்தின் புனிதத் தன்மையையை நாம் தொடர்ந்து ஆராய்ந்து கொண்டிருக்கும்போது இதையே சற்று தலைகீழாய் பார்ப்போம்.* ***என் வாழ்க்கைத் துணையோடு பேசும் போது நான் என்ன சொல்வது?*** *என்று கேட்பதற்கு பதிலாக* ***"எனது துணை பேசுவதை கேட்கும் போது நான் என்ன நினைக்கிறேன்?"*** *என்கிற கேள்வியை எழுப்பிப் பார்க்கலாம். இது இந்த விஷயத்தை இன்னும் ஆழமாக வேறொரு கோணத்தில் பார்க்கத் தூண்டும்!*

***"எனது துணை பேசுவதை கேட்கும் போது நான் என்ன நினைக்கிறேன்?*** *என்கிற இந்தப் புதிய கேள்வி மீது நம் கவனத்தை செலுத்தினால், உண்மையில் நாம் கடந்து செல்லும் அனுபவங்களைக் குறித்து நமது எண்ணங்கள் மெய்யாகவே கதை கதையாய்ச் சொல்ல ஆரம்பித்துவிடும்.*

**சேலா** *(அமைதலுடன் சிந்திக்கவேண்டிய) சமயம் அல்லது நேரம்: நமது வாழ்க்கைத் துணை ஒரு கேள்வியை கேட்கும் பொழுது நம் எண்ணம் எங்கிருக்கிறது? அந்தச் சமயத்தில் நாம் அமைதியுடன் இருந்து அவர் பேசுவதன் மீது நமது கவனத்தைச் செலுத்துகிறோமா ? நாம் வாழும் இந்த உலகில் கவனத்தைச் சிதறடிக்கும் காரியங்கள் அநேகம் உண்டு. வாழ்க்கைத்துணை பேசும்போது நமது கைபேசியை, தொலைக்காட்சி பெட்டியை நிறுத்துகிவைக்கிறோமா?*



வேலை செய்வதை நிறுத்துவது, பிள்ளைகளோடு விளையாடுவதை நிறுத்துவது, விளையாடிக்கொண்டிருப்பதை நிறுத்துவது, நாம் செய்துகொண்டிருப்பது எத்தனை பெரிய காரியமாக இருப்பினும் அதை நிறுத்துவது என்பது - மிகவும் முக்கியத்துவம் நிறைந்த ஒன்று. கிறிஸ்தவ கேள்விகள் என்கிற இந்த பகுதியை தயாரிப்பதற்காக நான் அதிகமாய் உழைக்கிறேன். பெரும்பாலும் போட்காஸ்ட் *(PODCAST)* அலுவலகத்தில் நான் வேலை செய்க்கொண்டிருக்கும்போது, எனது மனைவி ட்ரிஸியா *(Tricia )* என்னுடன் சில காரியங்களை கலந்து ஆலோசிக்க வருவார்கள். வழக்கமாய் நான் ஏதாவது ஒரு வேலைக்கு மத்தியில்

இருப்பேன்- அப்போது நான் அவரிடம் "கொஞ்சம் பொறுத்துக்கொள் அன்பே- இந்த சிந்தனையை நான் மறந்துவிடும் முன்பு எழுதி முடித்துவிடுகிறேன்" என்று சொல்வேன். அதை டைப் செய்து விட்டு, நிதானத்துடன் அவர்களை திரும்பி பார்ப்பேன் - இப்போது என்னால் கவனத்துடன் அவர்கள் பேசுவதை கேட்கமுடியும். இப்படி இல்லாமல் – "அப்படியா சொல்லு" என்று கூறிவிட்டு, நான் டைப் செய்வதை தொடர்ந்துகொண்டே இருந்தால் எப்படி இருக்கும்? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அந்த நேரத்தில், நான் காது கொடுத்து கேட்க வேண்டியது தானே எனக்கு முக்கியம்.

### கூர்ந்து கேட்பது என்கிற முக்கியமான விஷயத்தை நாம் எப்படி கையாள்வது?

ஆவிக்குரிய ரீதியில் செயல்படுத்துவதற்கு அடிப்படை அன்பில் இரண்டு வகை உண்டு என்பதை, கவனத்தில் வைக்க வேண்டும். இதில் ஒன்றைக் கைவிட்டு மற்றதை மட்டுமே செயல்படுத்துவது பெரும்பாலும் நடக்கக்கூடியதே; மட்டுமன்றி, இரண்டின் மீதும் கவனத்தை இழந்து விடக்கூடியதும் சாத்தியமே.




உறுதியான திருமணம் பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவருக்கு இருக்கும் மரியாதையின் மீது கட்டப்படுகிறது. இதோடு கூட -நாம் **பொறுமையாய் சகித்து** கொள்ளும் எந்த ஒரு காரியத்தையும் பாசத்துடன் **அரவணைத்துக்கொள்ளுகிற** ஒன்றாக மாற்றிக்கொள்ளும் பக்குவம் எப்போதும் அதிகரித்துக்கொண்டே போகவேண்டும்.

வேதத்தில் கூறப்பட்டிருக்கும் 3 விதமான அன்பை குறிக்க 3 கிரேக்க வார்த்தைகள் இருக்கிறது. **1. பிலியா(Philia) 2. அகாபே (Agape) 3. ஸ்டோரேஜ் (Storge)-**

நான்காவது **ஈரோஸ் (E R O S)**. இது வேதத்தில் அதிகம் உபயோகிக்கப்படவில்லை. இந்தக் கடைசி வார்த்தைப் பாலியல் ரீதியிலான அர்த்தத்தில் பெரும்பாலான இடங்களில்

அறியப்பட்டாலும், உண்மையில் வசனத்தில் இல்லை என்பதை நினைவில்கொள்ள வேண்டும்.

இதில் இருக்கும் முதல் வார்த்தையான **பீலியா** என்பதன் மூல வார்த்தை:

**அன்பு** - ஸ்ட்ராங்'ஸ் எக்ஸ்ஹாஸ்டிவ் கன்கார்டன்ஸ் (Strongs Exhaustive Concordance)

**#5362- பிளாட்ன்ரோஸ் (philandros)** - மனிதர் மீதான விருப்பம்; (i.e) தங்களுடைய கணவனை நேசிப்பது போன்ற மனைவியின் பாசம்.

**#5387 பிளாஸ்டோர்கோஸ் (philostorgos)** - குடும்பத்தார் /உறவினரை அரவணைத்தல் - உற்றார் உறவினர் மீதான இயற்கையான பாசம் (i.e) சக கிறிஸ்தவர் மீதான சகோதர உணர்வு; அன்போடு நேசித்தல்.

**#5388- பிலோடெக்னோஸ் (philoteknos)** - தனது பிள்ளைகள் மீதான பாசம் (i.e) தாய்மையின் அன்பு- சொந்தப் பிள்ளைகள் மீதான அன்பு.

இதில் கணவன், மனைவி இடையிலான அன்பு; பெற்றப் பிள்ளைகள் மீதான அன்பு; பிள்ளைகளுக்குத் தம் பெற்றோர் மீதான அன்பு ஆகியவை அடங்கும். இந்த நிலை மிகவும் அடிப்படையான இயற்கையான உள்ளுணர்வைக் குறிக்கும். மற்றொரு வார்த்தையில் சொல்வதானால் இது குடும்ப உறவுகளுக்குள்ளான பாசத்தை குறிக்கும். இதேவித அன்பு கிறிஸ்தவ சகோதரத்துவத்திற்கும் பொருந்தும்.

இந்தக் குடும்பப் பாசம் என்பது அன்றாட குடும்பக் காரியங்களை, கேலி, கிண்டல், மனதின் உற்சாகம், வாழ்க்கையின் போராட்டங்களை ஒருவருக்கொருவர் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளும் அன்றாடப் பழக்கத்துடன் எப்போதுமே இருக்கவேண்டிய ஒன்று. இப்படிப்பட்டதொரு அன்பு நமக்கும் வேண்டியதாய் இருக்கிறது.

***இப்படிப்பட்ட அன்பின் அவசியம்:***

***தீத்து:2:4-5 (NKJV): "4. தேவவசனம் துக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும்<5362>, தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும் <5388>, 5. தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்திசொல்லு."***

*இந்த வசனத்தில் குடும்ப அன்பு என்னும் இரண்டு வகை பிலோஸ் (Filos) குறித்தும் இருக்கிறது. இவர்களிடையே இந்த அன்பு இல்லை என்று சொல்லவில்லை, ஆனால், அந்த இளம் மனைவியும் கணவனும் இந்த அன்பின் மீதான கவனத்தை இழந்துவிடக் கூடாது, ஏனெனில் இது நமது கிறிஸ்தவ கடமை (அ) பொறுப்பாக இருக்கிறது. இந்த அன்பு நமது வாழ்வின் மையமாகவும், தொடர்ச்சியாகவும் இருக்க வேண்டும்.*

*இந்தக் குடும்ப அன்பு தான் கணவன் மனைவிக்கு இடையிலான தாம்பத்திய உறவில் பரஸ்பரம் உணர்வுகளைப் பரிமாறிக்கொள்ளும்படி, இருவருக்கும் இடையில் ஓடும். ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளும் இந்த உணர்வினை வளர்த்துக்கொள்ளுதல் மிக மிக அவசியம். "நான் உன்னைக் கவனித்துக்கொள்கிறேன், நீ என்னை கவனித்துக்கொள்," இப்படியாய் நாம் இருவரும் ஒருவரை மற்றொருவர் கவனித்துக்கொள்வோம். "நான் உனக்கு செவி கொடுக்கிறேன், நீ எனக்கு செவி கொடு", இப்படிப்பட்ட பரஸ்பர பரிமாற்றம் மட்டுமே திருமணத்தை ஆரோக்யமானதாய், வலுவானதாய் வைத்துக் கொள்ளும், இது தான் இந்த தீத்து வசனப்பகுதியில் விவரிக்கப்பட்டிருக்கிறது.*

## அக்கறையும், அர்ப்பணிப்பும் மிகுந்த தொடர்பு/ கருத்துப் பரிமாற்றம்:

**நம் வாழ்க்கைத் துணை மீது கொண்டிருக்கும் அன்பு மிகவும் ஆழமானதாக இருக்கும் போது தான் அவர்கள் பேசுவதை உண்மையாகவே கவனத்துடன் கேட்பதற்கு நம்மால் முடியும். மாறாக, நமது கவனம் அதில் இல்லாமல் போவதும், ஆர்வம் இன்றி போய்விடுவதும் அது அவர்கள் மீது நமக்கிருக்கும் அன்பு குறைந்து வருவதற்கான அறிகுறி ஆகும். இந்த மாறுதலை நான் அடையாளம் கண்டுவிட்டால், உடனே இதற்கானப் பரிகாரத்தை கையில் எடுத்துச் சரி செய்துவிட்டால், பிறகு திரும்பப் பெற்று விட்ட இந்த அன்பை நினைத்து நான் தான் பெருமகிழ்ச்சி அடையும் வாழ்க்கைத் துணை என்று சொல்லும்படியாக இருப்பேன்.**



*நமது வாழ்க்கைத் துணை ஏதாவது ஒரு காரியத்தை நம் கவனத்திற்கு கொண்டு வரும்போது, நாம் அதற்கு எப்படி மறுமொழி கூறுகிறோம்? அரைமனதுடன் பதில் அளித்தால், நமது பரிமாற்றமும் அரை மனதுடன் தான் இருக்கும். எல்லாமே அரைமனதுடன் செய்யப்படுமாயின், அதில் மனதார செய்யப்படுவது என்று எதுவும் இருக்காது. படிப்படியாக நாம் எங்கு இருக்க வேண்டுமோ அந்த ஸ்தானத்துக்கு நேரெதிராக போய்க்-கொண்டே இருப்போம்.*




*இவ்விதக் காரியத்தைக் குறித்துச் சிந்திக்க வேண்டும். மீண்டும், மீண்டும் அதை ஆராய வேண்டும், அப்போது எதையாகிலும் கண்டுபிடித்தால் உடனே அதனைச் சரி செய்துகொள்ளவேண்டும். சில நேரங்களில் இந்த*

முதன்மையான அன்பை நாம் உணரவே மாட்டோம். அங்கிருந்து நாம் எங்கே போகிறோம்?




**உங்கள் துணைக்கு முதலிடம் கொடுப்பதன் மீது தான், உறுதியான திருமணம் கட்டப்படுகிறது.**

நம் துணையிடம் இருந்து பதிலுக்கு என்ன கிடைக்கும் என்று எதிர் பார்க்காமல் அவரை நம்மால் கூடுமானவரை நேசிப்பதே திருமண பந்தத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் அஸ்திபாரமாக இருக்கும்.

**அன்பு:** *ஸ்ட்ராங்'ஸ் எக்ஸ்ஹாஸ்டிவ் கன்கார்டனஸ் (S t r o n g s Exhaustive Concordance) #25 = அகாப்போ (agapao) நேசிப்பது (சமுதாய ரீதியில்/தார்மீக ரீதியில்)*

**அன்பு:** *ஸ்ட்ராங்'ஸ் எக்ஸ்ஹாஸ்டிவ் கன்கார்டனஸ் (S t r o n g s Exhaustive Concordance) #26 = அகாபே அன்பு (i.e) பாசம் அல்லது இரக்கம்; விசேஷமாய் (பலவித) அன்பின் விருந்து*

இது ஒரு தன்னலமற்ற அன்பு. எதையும் கைமாறாக பெற்றுக் கொள்ளும் எண்ணமே இல்லாத இரக்கத்துடனான கனிவு. நாம் ஜீவனைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டாக, தனது ஒரே குமாரனைப் பலியாகத் தந்த நமது தேவனுடைய அன்பு இத்தகைய தன்னலமற்ற அன்பு என்பதை விளக்கும் காட்சியாகவே இருக்கிறது. எதையாகிலும் பெற்றுக்கொள்வோம் என்கிற எண்ணமே இல்லாமல் கொடுக்கும் தன்மை இது . இதே போன்றது தான் இயேசுவின் அன்பும். கைமாறாகத் தான் எதையாவது பெற்றுக் கொள்வோம் என்கிற எதிர்பார்ப்பு ஏதும் இல்லாமலேயே அவர் கொடுத்தார். அவரது ஊழியம் முழுவதும் இது போன்ற நிலையில் வாழும்படி ஜனங்களுக்கும் போதித்தார்.

இப்படிப்பட்ட இரக்கமுள்ள தயாள அன்பைக் குறித்து இரண்டு உதாரணங்களைப் பார்ப்போம்:

***கீழே உள்ள உதாரணம் இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன் இரவில் நடந்தது:***

***யோவான் 15:12 (NASB) "12 நான் உங்களில் அன்பா <25> யிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பா<25>யிருக்கவேண்டு-மென்பதே என்னுடைய கற்பனையா யிருக்கிறது".***

*இது ஒரு பரிந்துரை இல்லை -* ***இது எனது கற்பனையாய் இருக்கிறது.*** *நான் நேசிப்பதை நீங்கள் பார்த்த வண்ணமே, நீங்களும் நேசியுங்கள்! நீங்களும்* ***ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்*** *- உதாரணமாய்- இதற்குச் சற்று முன்னதாக இயேசு அப்போஸ்தலர்களின் கால்களைக் கழுவினது போல, இந்தக் காரியமும் எதையும் கைமாறாகப் பெற்றுக் கொள்வோம் என்று நினைக்காமல் கொடுக்கும் உணர்வை கொண்டதாகவே இருக்கிறது.*

***தன்னலமற்ற அன்புக்கு ஒரு எடுத்துக்காட்டு:***

***எபேசியர்: 5:25 (NASB): "25 புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு<25> கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு <25>கூர்ந்து".***

*கணவன் தன்மனைவியை, எதிர்பார்ப்புகள் ஏதும் அற்ற ஒருவழிப் பாதையாகவே - எதையும் திரும்பப் பெறுவோமா என்கிற கவலையே இல்லாத அன்பையே செலுத்தவேண்டும். இதுவே அந்த உயர்தர அன்பு நிலை.*

***இவ்வித தன்னலமற்ற அன்பையே, மெய்யான திருமண உடன்பாட்டின் அறிக்கை வெளிப்படுத்தும்:***

***ஆதி:2:24: (NASB) "24 - இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்."***

*அவ்வாறு இசைந்து வாழ்வதற்கு எந்த ஒரு நிபந்தனையும் இல்லை. ஒருவருக் கொருவர் மோதலில் இருக்கும் போது நாங்கள் இசைந்து வாழ்கிறோம், உறவுமுறை நல்ல விதத்தில்*

போய்க்கொண்டிருக்கிறது, எங்களுக்குள் நல்ல கருத்துப் பரிமாற்றமும் உண்டு என்று நாம் சொல்லிக் கொள்ள முடியாது. திருமணம் என்பது வாழ்நாள் முழுவதும் கடைபிடிக்க வேண்டிய ஒரு நிபந்தனையாக இருக்கிறது என்று தான் சொல்லப்பட்டிருக்கிறது, காரியங்கள் எப்படி இருந்தாலும் நாம் செய்தே தீரவேண்டி இருக்கின்றது. சூழ்நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும், நம் வாழ்க்கைத் துணை எதற்குமே நமக்குத் திரும்பிச் செய்பவராக இல்லை என்றாலும், அவர்களுடன் நாம் இசைந்து தான் வாழவேண்டும்.

இதைச் செயல்படுத்துவது அல்லது சாதிப்பது மிகவும் கடினம். ஏனெனில், நமது வாழ்க்கைத் துணையோடான கருத்துப் பரிமாற்றங்கள் மிகவும் இயல்பானதும் காலம் முழுவதும் தொடர்ச்சியாக நடக்கும் ஒன்றாகவும் இருக்கின்றது. இதுதான் இதில் உள்ள சிக்கல் - அதீதமாய் இதை செயல்படுத்த நாம் முயல்வதைக் காட்டிலும், வெகு சாதாரணமாகவே கையாண்டுவிடுகிறோம். கவனத்துடன் கரிசனையோடு கருத்தைப் பரிமாறிக் கொள்வதை குறித்து நாம் அடுத்துப் பார்க்கும்பொழுது, அதை இந்த தன்னலமற்ற அன்பு என்ற விதத்தில் இதைக் குறித்து சிந்திபோம்.

## அக்கறையும், அர்ப்பணிப்பும் மிகுந்த தொடர்பு/ கருத்துப் பரிமாற்றம்:

**என் துணைக்கு நான் செவி சாய்ப்பதில் எனக்கு இருக்க வேண்டிய உடனடியான கரிசனையுள்ள அணுகுமுறையில் எனக்குத் தனிப்பட்ட முறையில் உண்மையாகவே சிக்கல் இருப்பதாய் நான் கண்டு கொள்ளும் போது-இதற்கான அடுத்த அடியை நான் எடுக்கும் அவசியத்தில் இருக்கிறேன். இயேசு எனக்கு காட்டிய அதே அன்பை நான் எனதாக்கிக் கொள்ளவேண்டும்- என்னிடமிருந்து எதையும் கைமாறாக எதிர்பார்க்காமல் - என் சொந்தத் தெளிவின்மையின் மத்தியிலும் வாழ்க்கைத் துணையோடு இசைந்து வாழ்ந்தே தீர வேண்டும் என்கிற எண்ணத்தில்- எனக்கு அளிக்கப்பட்ட அதே அன்பை நான் செலுத்த வேண்டும்.**



*இந்தத் தருணத்தில் நமக்கு நமது துணையின் மீது பாசம் இல்லை என்றால்- நமது சூழ்நிலை என்னவாக இருப்பினும் இயேசு நம்மை சிநேகிக்காமல் போயிருந்தால் எப்படி இருக்கும் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். நமது துணையை நாமும் இது போன்றே அன்பு செய்ய வேண்டும். நம் உறவில் இந்தப் பாசம் எப்போதுமே நிலைத்திருக்கும்படியாய் நாம் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டே இருக்கவேண்டும். இந்த முயற்சியை கைவிட்டு விடாதீர்கள்- இன்னமும் மேலே போய்க்கொண்டே இருங்கள்- இயேசுவைப் போல் மேலானதொரு வாழ்க்கையை வாழுங்கள். இதை நாம் இன்னும் உணர்ந்து கொள்ள வில்லை என்றால், இயேசு நமக்கு என்ன செய்தாரோ அதையே நாமும் செய்வோம். இயேசு ஒரு போதும் நம்மை நேசிப்பதை நிறுத்துவதே இல்லை. நாம் பாவம் செய்து விட்டு மன்னிப்பு கேட்கும் போது கூட. - அவர் இன்னும் எப்போதும் போலவே அன்பு செய்கிறார். இது எத்தனை அருமையானது. இதையே நாமும் நம் துணைக்கு வழக்கமாய், தொடர்ந்து செய்யவேண்டும். இந்த விசேஷமான அன்பைச் செலுத்த முடியவில்லையே என்று நாம் உணரும் போது, இயேசு என்ன செய்தாரோ அதையே நாமும் செய்துவிட வேண்டும். இப்படியாய் நமது திருமணத்தில் இரண்டு வகையான அன்பு கிரியை செய்துகொண்டிருக்கிறது.*

***கருத்தைப் பரிமாறிக்கொள்வதில் நமக்குள்ள சிரமத்தை உணரும்போது, நம்மில் எத்தனைப்பேர் நமக்கென்று ஒரு வாழ்க்கைத் துணை இருப்பதில் நமக்கு இருக்கும் நன்மைகள், வாய்ப்புகள், சலுகைகள் அல்லது உரிமைகள் குறித்து அந்த இடத்திலேயே நின்று நிதானித்து சிந்தித்திருக்கிறோம்?***

***பிரசங்கி 4: 9-12 (NASB): "9. ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்; அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும். 10. ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான்; ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே. 11. இரண்டுபேராய்ப் படுத்துக்கொண்டிருந்தால் அவர்களுக்குச் சூடுண்டாகும்; ஒண்டியாயிருக்கிறவனுக்குச் சூடுண்டாவது***



***எப்படி? 12. ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்துநிற்கலாம்; முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது."***

***முப்புரிநூல்*** *என்பது நாமும், நமது வாழ்க்கைத் துணையும், எல்லாம் வல்ல தேவனின் முன்பு நாம் செய்துகொண்ட உடன்படிக்கையும் என்று நமக்கு உணர்த்துகிறது. மிகவும் உறுதியான பந்தத்தை உண்டாக்குவது இந்த மூன்றும் சேர்ந்த முப்புரிநூலே.*

*நமது வாழ்க்கைத் துணையை நினைக்கும் போது, நம்மை இணைத்திருக்கும் அந்த தெய்வீகக் கிருபையைக் குறித்து சிந்தித்துப் பார்க்கவேண்டும்! அந்த தெய்வீக கிருபையின் வல்லமையை குறித்தும் சிந்தித்து பார்க்கவேண்டும். இதனால் நமக்கு கிடைத்திருக்கும் சிலாக்கியங்களை எண்ணி பார்க்கவேண்டும். இவைகளை அலட்சியமாய் ஒதுக்கிவிட வேண்டாம். இதற்கு அதிமுக்கியத்துவம் கொடுத்து நமது நினைவில் முன்னிறுத்திக் கொள்ள வேண்டும்.*

*நமது துணையை நேசிக்க பல்வேறு வழிகள் உண்டென்று நாம் உணர்ந்துகொள்வதன் மூலம், நமக்கிடையே உள்ள கருத்து வேறுபாடுகளை சரிசெய்து கொள்வதற்கும் அநேக வழிகள் உண்டு என்பதையும் புரிந்துகொள்ளலாம்.*

***இதற்கு மேல் காது கொடுத்து கேட்கவேண்டாம், விலகிக்கொள்ளலாம் அல்லது இதோடு கைவிட்டுவிடலாம் என்று நினைக்கும் நிலையை எட்டும் ஒரு தருணம் வரும்போது என்ன நடக்கும்?***

*நான் நேசிக்கப்படவில்லை என்று உணர்ந்து விட்டால் காரியத்தைக் கைவிட்டுவிடுவதும், பின்வாங்கிவிடலாம் என்கிற எண்ணம் வருவதும் மிகவும் எளிது. இதற்குமேல் நம்பிக்கை இல்லை அல்லது என்வாழ்வின் மிகப்பெரிய தவறு இது அல்லது இப்படி நடப்பதற்கு நாம் எந்த வகையில் பொருத்தமானவர் என்ற*

*எண்ணங்கள் நமக்கு வருவது மிகவும் இயல்பான ஒன்று. இப்படிப்பட்ட தனிமைப்படுத்துதல் இதயவாசலை மூடிக்கொள்ளும் நிலைக்குத் தூண்டிவிடும். இப்படி நடந்து விட்ட பின்பு இதை சரிசெய்ய தீவிர முயற்சிகள் எடுக்க வேண்டியதாகிவிடும் . இது உலகத்தில் சகஜமாய் நடக்கிற ஒன்று. நாமோ இப்படிப்பட்ட பின்வாங்குதல், கைவிட்டுவிடுதல் குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.*

*அர்ப்பணிக்கப்பட்ட பொறுப்புள்ள கிறிஸ்தவருக்கோ இப்படிப்பட்ட காரியங்கள் மிகவும் அரிதானவையாகவே இருக்கவேண்டும். ஆனால் நமது துணையானவர் தனது கோர முகத்தைக் காட்டும் போது நாம் என்ன செய்வது? குடும்ப அன்பின் பிணைப்பின் முக்கியத்துவம் குறித்து வேதத்தில் விளக்கப்பட்டிருக்கும் மாபெரும் காட்சியை நாம் பார்க்கலாம்.*

***குடும்ப அன்பின் குறைபாட்டை பாவத்தின் ஆழத்துக்கு அடையாளமாகவும், கடைசி காலத்திற்கான அடையாளமாகவும், இரண்டு இடங்களில் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது:***

***ரோம: 1:28,31 (N A S B ) : “ 2 8 தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். 31 உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய் <794>, இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள்”.***

***உணர்வில்லாதவர்/அன்பில்லாதவர் :** ஸ்ட்ராங்’ஸ் எக்ஸ்ஹாஸ்டிவ் கன்கார்டன்ஸ் (Strongs Exhaustive Concordance) # 794 அஸ்டர்கோஸ் (astorgos) - உறவுகளோடான அன்புக்கு பதில் வெறுப்பு, சுபாவ அன்பில்லாமை*

***உணர்வில்லாதவர் /அன்பில்லாதவர் :** தாயர் 'ஸ் கிரீக் -ஆங்கில லெக்சிகன் Thayer's Greek-English Lexicon #794 astorgos; சுபாவ அன்பில்லாதவர்(குடும்ப அன்பில்லாதவர்)*

*கடந்த காலத்தில் அப்போஸ்தலர் பவுலின் நாட்களில் அவர் தன்னைச் சுற்றி உள்ள சீரழிந்த உலகத்தைக் குறித்து எழுதவும், உற்று கவனிக்கவும் செய்தார். இந்தச் சீரழிவின் ஆழத்திற்கு மிக முக்கியமான அறிகுறி குடும்பத்தில் அன்பு இல்லாமையே என்று கூறினார். இது ஒரு மாபெரும் குற்றசாட்டு அல்லவா! நாம் தவறான பாதையில் இருக்கிறோம் என்று எச்சரிக்கும் ஒளியாகவும் இது இருக்கிறது என்பதை பார்க்கும்போது இன்னும் ஆச்சரியமாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைக்குள் நாம் விழுந்துவிட்டால் நாம் நமது திருமண வாழ்வில் எந்த ஒரு நன்மையையுமே அனுபவிக்க முடியாது.*

***இதையே தீர்க்கதரிசன கண்ணோட்டத்தில் நின்று நாம் இதை பார்ப்போம்:***

*2* ***தீமோ*** *3:1-3 (N A B S ) :* ***“ மேலும், கடைசிநாட்களில் கொடியகாலங்கள் வருமென்று அறிவாயாக.*** *2* ***எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன் மாருக்குக் கீழ்ப் படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும்,*** *3* ***சுபாவ அன்பில்லாதவர்களாயும்*** *<794>,* ***இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர் களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும்,”***

*இங்கேயும் அதே கிரேக்க வார்த்தையான* ***(astorgos) அஸ்டர்கோஸ்;*** *சுபாவ அன்பில்லாதவர் (குடும்ப அன்பில்லாதவர்) என்பதை நாம் பார்க்கிறோம்- அதே குடும்ப அன்பற்ற நிலைமை. நாம் நம்மைச் சுற்றிலும் பார்க்கும் போது, இக்காலத்து சந்ததியார், பல்வேறு வழிகளில் இந்த தீர்க்கத்தரிசனத்தை மிக எளிதாக நிறைவேற்றிவிடுகிறார்கள். குடும்ப அன்பற்ற இந்த நிலையை, நம்மை சுற்றியுள்ள உலகத்தின் அநேக இடங்களில் நாம் இப்போது பார்க்கிறோம்.*

***என் துணையோடு என்னைத் தொடர்புப்படுத்தி பார்க்கும்போது, இவ்வுலகத்தின் நெருக்கடிகளுக்கு நான் பணிந்துபோய் விடுகிறேனா?***

*நாம் இந்தத் தீர்க்கதரிசன வார்த்தைகளை நிறைவேற்றுகிறோமா? அப்படியாய் நாம் செய்வோமாகில், அது மிகவும் மோசமாக / பயங்கரமாக இருக்கும். இதை நாம் செய்ய விரும்புவதில்லை! மிகவும் மேலான, உறுதியான, அதிக உயர்வான ஒன்றுக்காய் உறுதியாய் நிற்கவேண்டும் என்றும், மேலான உயரத்திற்குச் செல்ல, அதிகமாய் நன்மைகள் கொடுக்கப்பட்டிருக்கும் நாமோ, இப்படியான தாழ்ந்த பாதையில் போவது சரி அல்ல.*

*நம் துணையோடு கருத்தைப் பரிமாறவோ அல்லது ஊக்கத்தோடு காது கொடுத்துக் கேட்கவோ வேண்டிய தருணத்தில், நாம் அதைப் புறக்கணிக்கவோ, ஒதுக்கவோ கூடாது. நாம் எப்படி உணர்கிறோம் என்பது முக்கியமானது தான், ஆனால், திருமணமாகியுள்ள சூழலிலோ அல்லது திருமண உடன்படிக்கையிலோ இது மட்டுமே மிகவும் முக்கியமானதாக இருக்காது.* ***நமது வாழ்க்கை துணையை கனப்படுத்துவது / அவருக்கு மரியாதை அளிப்பது தான் மிகவும் முக்கியம்.*** *இதை நாம் எப்படி செய்வது?*

*மிகவும் உற்சாகமற்ற நிலையில் நாம் இருந்தாலுமே, பொறுமையாலும், தேவ கிருபையாலும் இதை செய்யமுடியும். அவமரியாதையோடு நடக்க நமக்கு அனுமதி இல்லை.*

*இயேசுவானவர் போதித்த பொதுவான கோட்பாடுகள் நமது திருமணங்களுக்கும் பொருத்தமானவைகளாகும்.*

***வாழ்க்கைத் துணையோடு கருத்து வேறுபாட்டில் இருக்கும் போது இதை முயற்சித்துப்பாருங்கள்:***

***மத்:5:43-44 (NASB): “43. உனக்கடுத்தவனைச் சிநேகித்து<25>,உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். 44. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்<25>; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.”***

*நம் பகைவரையும் நேசிக்கும் கிறிஸ்தவ குணாதிசயத்தைப் பெருகப்பண்ணும் / வளர்த்துக்கொள்ளும் வேலையில் நாம் இருப்போமாகில் - கருத்து வேறுபாட்டில் இருக்கும் நம் வாழ்க்கைத் துணையையும் நேசிக்க நாம் ஏன் முயற்சிக்க கூடாது? இங்கேச் சொல்லப்பட்டிருக்கும் அன்பு தன்னலமற்ற, இரக்கத்துடனான அன்பு. ஏனெனில், நமக்கு குடும்ப அன்பில் இருக்கவேண்டிய ஒர் இதமான உணர்வு இந்த கட்டத்தில் நமக்குள் இல்லாமல் போயிருக்கக்கூடும்.*



*நிச்சயமாய் இந்தக் குடும்ப அன்பை நமது விரோதிகளுடன் பகிரமுடியாது, ஆனால், இயேசு அவர்களை நேசித்தது போலவே நாமும் நேசிக்க தயாராக இருக்கவேண்டும், ஏனெனில் இயேசு அவர்களுக்காயும் மரித்தார். நமது விரோதிகளையும் நேசிக்க நாம் ஒருவேளை முயற்சி செய்து கொண்டிருப்போமாகில் நமக்கு மிகவும் நெருக்கமானவராகிய நமது வாழ்க்கைத் துணையை நேசிக்க நாம் எவ்வளவாக முயற்சி செய்யவேண்டும்? நாம் இதை இதுவரை உணராதிருப்போமானால், இயேசு எதைச் செய்தாரோ அதையே நாமும் செய்ய, இப்போதே இதற்கான முயற்சியை ஆரம்பிப்போம்*

***உன்னிடம் ஒப்புவிக்கப்பட்டக் காரியத்தைக் குறித்து தீவிரமாய் நீ கவனமாய் கைக்கொள்ள வேண்டிய விதம் குறித்து***

***இயேசு (விசேஷமாய் உவமைகளில்) பேசிய மற்றொரு பொதுவான கோட்பாடு:***

***லூக்கா: 16:10 (NASB): "10. கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்."***

*தேவனால் கொடுக்கப்பட்ட திருமண உடன்படிக்கை - பொறுப்புடன் கடைப்பிடிக்க நமது கைகளில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. இதை நாம் எப்படிச் செய்கிறோம்? எல்லா நிலைகளிலும் நாம் இதில் உண்மை உள்ளவர்களாய் இருக்கிறோமா? "என்ன இருந்தாலும் அவளை நான் ஏமாற்றவில்லை...." என்று சிலர் பொதுவாக சொல்வதைக் கேட்டிருக்கிறோம் – இது தான் நமது நேர்மையை விவரிக்க வேண்டிய முறையா? இப்படிப்பட்ட ஒரு இடத்தில் தொடங்கினோமாயின் என்றால், நாம் பிரச்சனையில் இருக்கின்றோம் என்றே அர்த்தம். இப்படியான நிலையில் நாம் இருந்தால், ஸ்திரமாய் நிற்கும் நம் கிறிஸ்தவரை கண்டுபிடித்து அவர்களுடன் இதைக்குறித்துப் பேசவேண்டும்.*

***இது மிகவும் ஆபத்தானது. குறைந்த பட்சம் மேலே சொல்லப்பட்ட வாக்கியம் போல் நடந்துவிட கூடாது. நாம் இந்த நிலைக்குள் நுழையும் அந்த நிமிடமே பகுத்தறிவுஆளுகை செய்ய ஆரம்பித்துவிடும். இது அழிவை, அதிருப்தியை, மன அமைதியின்மைக்கு வழி வகுத்துவிடும். இந்த மனசங்கடத்திலிருந்து வெளியே வருவது மிகவும் கடினம். நமக்கு உடன்படிக்கையின் உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது, ஆகவே தான் இதை நாம் செய்யவேண்டி இருக்கிறது***

*"கிறிஸ்தவ திருமணத்திற்கான வழிகாட்டி"யாக இருப்பதற்காகவே விசேஷமாய் வடிவமைக்கப்பட்டது போல் இருக்கும் அடுத்த பகுதியை குறித்து நாம் ஆலோசிப்போம்.*

***நமது சகோதரர்களிடத்தில் காட்டும் அதே அன்பை நமது வாழ்க்கைத் துணையிடமும் கொள்ளுங்கள்:***

***I பேதுரு 3:8-9 (NKJV): "8. மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்க முள்ளவர்களும், சகோதர <5361>***

***சிநேகமுள்ளவர்களும் மன உருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, 9.தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்".***

*__சகோதரர்__ : ஸ்ட்ராங்'ஸ் எக்ஸ்ஹாஸ்டிவ் கன்கார்டன்ஸ் (Strongs Exhaustive Concordance) #5361 பிலடெல்போஸ் (philadelphos); சகோதரர் மீதான பாசம்*

*(எ.கா): உடன்பிறப்புகள்; சகோதரரை போல் சிநேகிப்பது*




**என் வாழ்க்கைத் துணை மீது நான் அக்கறை கொள்ளாவிடில் நான் தேவனால் எப்படி நியாயம் தீர்க்கப்படுவேன் ?**

*உருவக் குத்தும் இப்படிப்பட்டதொருக் கேள்வியை ஒரு கிறிஸ்தவராக நம்மைக் கேட்டுக்கொள்ள தயாராக இருக்கவேண்டும். நமக்குப் பிரச்சனைகள் இருந்தாலோ அல்லது பெரும்பாலான நேரத்தில் கோபமாக இருப்பதோ அல்லது அடிக்கடி கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளாமல் இருப்பதோ இருக்குமானால், இந்தக் கேள்வியை நாம் நமக்கே கேட்டுக்கொள்ளலாம். வேதம் சொல்கிறது… நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள். இதற்கு எதிராக நாம் எப்படி செயல்படப்போகிறோம்? சிநேகமுள்ளவர்களும் மன உருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், எல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களுமாய் நாம் இருக்கவேண்டும். மறுபடியும் அதேக் குடும்ப அன்பையே இது குறிக்கிறது. நாம் அடுத்தடுத்து செய்ய வேண்டிய காரியங்கள் பலவற்றை இந்த வசனம் நமக்கு சொல்லுகிறது. திருமணத்தையும் கருத்து பரஸ்பர உரையாடலையும்*

*குறித்து நாம் பேசும் போது- அது நிச்சயமாய் மிகவும் பரிபூரணமான ஒன்றாக இருக்கவேண்டும் என்பதில்லை, ஆனால் அதேசமயம் நமது திருமணம் பலன் தரும் ஒன்றாக இருக்கவேண்டும். அதுதான் இதில் உள்ள மிக முக்கியமான காரியம். நமது துணை நம் மீது காட்டும் நடத்தை நல்லதும், மிகச் சரியானதுமாக இருக்கும் பட்சத்தில் அது நமக்கு இன்னும் பயனுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையைக் கொடுக்கும்.*

***நமது திருமண வாழ்க்கைக்கான வழிகாட்டியாகும் அடுத்ததொரு வசனப் பகுதி:***

***பிலிப்பியர் 2:2-4 (N A S B ) : " 2 நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்பு<26>முள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். 3. ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். 4. அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவகளையும் நோக்குவானாக".***

*நாம் சகோதரர்களை எப்படி நடத்த வேண்டும் என்று இங்கு சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். இருப்பினும், நம்மைக்காட்டிலும், நமது கோபத்தைக் காட்டிலும், விரக்தியைக் காட்டிலும், எரிச்சலைக்காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக நாம் நமது வாழ்க்கைத் துணையை நடத்துவதை அவர் சரியாக புரிந்துக்கொள்ளவில்லை என்றால், அந்த காரியம் நமக்கு மற்றொரு வெளிச்சத்தைக் கொடுக்கும். அப்பொழுது இதை, சகோதரரிடம் நாம் நடந்துகொள்ளும் விதமாகவே முதலில் கிருபையோடும், கனத்தோடும் எதிர்கொள்வோம்.*

*நான் இந்தக் காரியங்களைக் குறித்து யோசித்துக்-கொண்டிருக்கும் போது, என் தலையில் என்ன ஓடிக்கொண்டிருக்கிறது ? என்ன ஓடிக்கொண்டிருக்க வேண்டும்? இந்த வசனத்தை வாசிக்கும் போது நான் எவ்வளவாய் நிதானிக்கவேண்டும், எவ்வளவாய் அனுசரித்துப் போகவேண்டும், எவ்வளவு கவனமாய் செவி சாய்க்கவேண்டும், எவ்வளவாய் இதை மதிக்கவேண்டும் ?*

## கவனமும், பொறுப்பும் நிறைந்த கருத்துப் பரிமாற்றம்

***என் வாழ்க்கைத் துணையோடு எனக்கு என்னப் பிரச்சனை இருந்தாலும் அவைகள் எல்லாவற்றையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு அதை பெரிது படுத்தாமல் இருக்க முடியும் என்பதை நான் தெளிவாய்ப் புரிந்துகொள்ளவேண்டும். நான் இவ்வண்ணம் செய்ய வேண்டும் என உணரும்போது, என் பகைவனையும் நேசிக்கும் படி இயேசு எனக்குக் கற்பித்த அதே சுயநலமற்ற அன்பை நான் ஈடாகக் காண்பிக்கவேண்டும். எனது வாழ்க்கைத் துணை வேறு எதைக்காட்டிலும் மிகவும் விசேஷமானவர் என்பதை உணர்ந்து, உடன் சகோதரரிடம் நடந்து கொள்ளவேண்டிய அறிவுறுத்தலின்படியே என் வாழ்க்கைத் துணையிடமும் காண்பிக்க நான்முற்பட வேண்டும்.***



*நம் வாழ்நாள் முழுவதும் நமது வாழ்க்கைத் துணையோடு வாழ நாம் உடன்படிக்கை செய்திருக்கிறோம். இதன் அர்த்தம் என்னவெனில், நமக்கு அவர் தான் மிக மிக விசேஷமான மனிதர் அல்லது மனுஷி. அந்த உடன்படிக்கையே இது தான். அதை வாழ்ந்துவிடுவோமே.*

***கர்த்தருக்கு ஊழியம் செய்வது போலவே உங்கள் வாழ்க்கைத் துணையுடன் இணைந்து செயல்படுவது தான் திருமணத்திற்கு மிகச் சிறந்ததொரு உதாரணமாய் நமக்கு காட்டப்படப்படுகிறது:***

***அப்:18:2-3 (N A S B ) : " 2 . யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப்போகும்படி கிலவுதியுராயன் கட்டளையிட்டபடியினாலே, இத்தாலியாவிலிருந்து புதிதாய் வந்திருந்த பொந்துதேசத்தானாகிய ஆக்கில்லா என்னும் நாமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாவையும் அங்கே கண்டு, அவர்களிடத்திற்குப் போனான். 3. அவர்கள் கூடாரம்பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள்; தானும் அந்தத் தொழில்***

***செய்கிறவனானபடியினாலே அவர்களிடத்தில் தங்கி வேலை செய்துகொண்டு வந்தான்".***

*ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் ரோம் நகரத்தை விட்டு துரத்தப்பட்டிருந்தார்கள். பவுல் அப்போஸ்தலர் அவர்களுடன் தங்கி இருந்து, கூடார வேலைகளை அவர்களுடன் சேர்ந்து*

*செய்துகொண்டு, அவர்களுக்கு நற்செய்தியையும் பகிர்ந்து கொண்டிருந்தார். பின்பு அவர்கள் அவருடன் எபேசு பட்டணத்திற்கு சென்றார்கள். அவர்கள் பவுலுடன் மிகவும் நெருக்கமானவர்களாய் இருந்தார்கள், அவரும் அவர்களுடன் அப்படியே இருந்தார்.*



***மிகவும் திறமையாய்ப் பேசக்கூடியவனான அப்பொல்லோ போதனை செய்வதற்காக எபேசு பட்டணத்திற்கு வந்தான். ஆனால் அவன் கிறிஸ்தவ கோட்பாடுகளில் கைதேர்ந்தவனாக இருக்கவில்லை:***

***அப். 18:25-26 (NASB): "25. அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக் கொண்டு வந்தான். 26.அவன் ஜெபஆலயத்தில் தைரியமாய்ப் பேசத்தொடங்கினபோது, ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்".***

*நற்செய்தியை மிக அற்புதமாக வழங்கிக்கொண்டிருந்த*



அந்த அற்புதமான பேச்சாளனை தனியே அழைத்து, இயேசுவின் ஞானஸ்நானம் போன்ற - அவருக்கு தெரியாத இன்னும் அநேக சத்தியங்களை குறித்து மிகவும் அமைதலோடும், தாழ்மையோடும் இவர்கள் இருவரும் சொன்னார்கள். இது அவரை இன்னும் சிறந்த போதனையாளராக செய்யும்.

***ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் வேதத்தில் உள்ள காரியங்களைத் தொடர்ந்து செய்துவந்தனர் அதனை மீண்டும் இங்கே காணலாம்:***

***ரோமர் 16: 3-5 (N A S B ) : " 3 . கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன்வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். 4 அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்; ….. 5. அவர்களுடைய வீட்டிலே கூடிவருகிற சபையையும் வாழ்த்துங்கள். அகாயாவிலே கிறிஸ்துவுக்கு முதற்பலனாகிய என் பிரியமான எப்பனெத்தை வாழ்த்துங்கள்”.***

*இவர்கள் இருவரும் தனக்காய்த் தங்களுடைய உயிரையே பணயம் வைத்தார்கள் என்று அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். அவர்கள் விருந்தோம்பலில் சிறந்தவர்களாயும், ஆராதனையில் கலந்து கொள்ளும்படி சகோதரர்களைத் தங்கள் வீட்டிற்கு விரும்பி அழைக்கிறவர்களாயும் இருந்தார்கள்.*

***அவர்கள் இருவரும் சேர்ந்து வழிநடத்துகிறவர்களாகவும் சுவிசேஷமென்னும் மாபெரும் காரியத்திற்காய் ஆபத்துகளை***


***எதிர்கொள்ளுகிறவர்களாகவும் இருந்தார்கள்:***

***I கொரி:16:19 (NASB): "19 ஆசியா நாட்டிலுள்ள சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள். ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் தங்கள் வீட்டிலே கூடுகிற சபையோடு கூட கர்த்தருக்குள் உங்களை மிகவும் வாழ்த்துகிறார்கள்".***

*பிரிஸ்கில்லாளின் பெயரே பெரும்பாலும் முதலில் சொல்லப்படுகிறது. இது அவள் பவுலுக்கு மற்றும் பல சகோதரருக்கும் எவ்வளவு விசேஷமானவளாய் இருந்திருக்கிறாள் என்பதைக் காட்டுகிறது. கர்த்தருக்கு ஊழியம் செய்த இந்த வியக்கத்தக்க ஒற்றுமையை நாம் பார்க்கமுடிகிறது. இவர்களில் ஒருவரை விட்டு மற்றவரை மட்டும் வேதத்தில் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. நமக்கு ஊக்கமளிக்கும் எத்தனை அருமையானதொரு முன்மாதிரி!*

## கவனமும் பொறுப்பும் நிறைத்த கருத்துப் பரிமாற்றம்

***என் வாழ்க்கைத் துணையோடு பேசுவதற்கு நான் தடுமாறும் போது, சற்று நிதானித்து, எனது பேச்சு என்னவாக இருக்கவேண்டும்? எப்படி இருக்க வேண்டும் ? என்று கவனமாய் சிந்தித்து, வார்த்தைகளைச் சரிவர மாற்றி அமைத்து, என் துணையின் முக்கியத்துவத்தை***



***இறுக்கமாய்ப் பற்றிக்கொள்ள வேண்டும். எந்த நிலையிலும் என் துணையை நேசிக்க நான் கடும் முயற்சி எடுத்து, என் வாழ்க்கைத் துணையுடன் எந்த சூழ்நிலையிலும் எல்லா அனுபவங்களை கடந்தும் உண்மையோடு இசைந்து பற்றிக்கொண்டிருக்கும்படியாய் - என்னை ஊக்குவிக்கும் நல்ல கிறிஸ்தவ திருமணங்களின் முன்மாதிரிகளை தேடிப் பார்க்க வேண்டும்.***

*என் வாழ்க்கைத் துணையோடு பேசும் போது நான் என்ன சொல்லவேண்டும் என்பதை குறித்து நம்மை நாமே*

கேட்டுக்கொள்ளும் போது, இதை குறித்துத் தீர்மானிக்க நமக்குரிய வாய்ப்பு இருக்கிறது. நான் வருத்தத்தில் இருக்கும் போது கூட என் வாயில் வரும் எல்லா நல்ல வார்த்தைகளால் நான் அவர்களை ஆசீர்வதிக்க முடியும் என நம்புகிறேன். தேவ கிருபையால் இதைச் செய்வேன் என்று நான் தீர்மானித்துக் கொள்ளவும் முடியும்.



நம் துணை பேசும் போது, நான் என்ன பதில் கூறவேண்டும் என்பதில், இன்று நாம் படித்திருக்கும் வேதாகம கோட்பாடுகளின் தாக்கம் இருக்கவேண்டும். என்னுடைய எல்லா சொல்லிலும் எல்லா செயலிலும் நான் என் துணையை ஆசீர்வதிக்கட்டும், இதன் வழியாக - இதற்கு முன் நான் எப்போதும் இல்லாத வகையில், தேவனுக்கு ஊழியம் செய்யட்டும்.

நம்மால் இதைச் செய்ய முடியும்! நான் அனுதினமும் அவர்களை ஆசீர்வதிக்கவேண்டும் என்பதை மட்டுமே நாம் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். நம் துணையுடன் அன்பாய், உயர்வாய், மரியாதையோடும் பேசவேண்டும். அவர்களை எப்போதும் போற்றிப் பாதுகாத்துக்கொள்ளுங்கள், அதன் பிறகு நமது வாழ்கையில் என்ன நடக்கிறது என்று பாருங்கள்.

# என் வாழ்க்கைத் துணையோடு பேசும்போது நான் என்ன சொல்வது?

**கூடுதல் கருத்துக்களும் படிக்கவேண்டிய கேள்விகளும்**

***நாம் ஒருவருக்கொருவர் மன்னித்துவிடுவதற்கான வலிமை என்பது நாம் இருவரும் ஒருவரை ஒருவர் எப்படி பார்த்துக்கொள்கிறோம் என்பதைப் பொறுத்தே இருக்கிறது:***

***பிலிப்பியர் 2:2-8 (N A S B ) : " 2 . நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். 3.ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். 4.அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவகளையும் நோக்குவானாக."***

***நம்மை நாமே எப்படி பார்க்கிறோம் என்பதையும்; நமக்குள் இருக்கும் கிறிஸ்துவை நாம் எப்படி பார்க்கிறோம் என்பதையும் பொறுத்துத் தான், நாம் இருவரும் ஒருவரை ஒருவர் எப்படி பார்த்துக் கொள்கிறோம் என்பதும் இருக்கும்:***

***"5.கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; 6.அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்; 7.தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். 8.அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்."***

*"மன்னிப்பதில்லை" என்கிற மனப்பான்மையில் நாம் பிடிவாதமாய் இருப்பது, நம்மை உடல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் பாதிக்கும். ஏனெனில் நமது சிந்தனையும்,*

*வாழ்க்கையும், இந்த மனப்பான்மையின் தெளிவான மற்றும் ஆதிக்கம் செலுத்தும் போக்கால் ஆளப்பட்டுவிடும். நாம் உடல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் பாதிக்கப் பட்டுவிட்டோமாகில்-நாம் ஆவிக்குரிய ரீதியிலும் பாதிக்கப்பட்டுவிடுவோம்- மேலும் அது கிறிஸ்துவைப் பின்பற்றும் நமது திறனை நேரடியாக திசை திருப்பிவிடும்.*

***பொதுவாகவே நம் திருமணத்தைச் சிதைக்கும் நடத்தையின் பின்னால் இருப்பதென்னவோ பெருமை/ மனமேட்டிமை என்ற குணமே:***

***நீதி. 16: 18-20; 24-25 (N K J V ) : " 1 8 . அழிவுக்கு முன்னானது அகந்தை;விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை. 19.அகங்காரிகளோடே கொள்ளைப் பொருளைப் பங்கிடுவதைப் பார்க்கிலும், சிறுமையானவர்களோடே மனத்தாழ்மையாயிருப்பது நலம். 20.விவேகத்துடன் காரியத்தை நடப்பிக்கிறவன் நன்மைபெறுவான்; கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான். 24.இனிய சொற்கள் தேன்கூடுபோல் ஆத்துமாவுக்கு மதுரமும், எலும்புகளுக்கு ஒளஷதமுமாகும். 25.மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு அதின் முடிவோ மரணவழிகள்."***

***எப்படிப்பட்ட நிலையிலும் ஒருவரை ஒருவர் மன்னிக்கும் திறன் என்பது உண்மையில் நாம் ஒருவரை ஒருவர் எந்தக் காண்ணோட்டத்தில் பார்க்கிறோம் என்பதையே பொறுத்திருக்கிறது:***

***பிலிப்பியர் 2:2-8 (N A S B ) : " 2 . நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்பு<26>முள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். 3.ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கட வீர்கள். 4.அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவகளையும் நோக்குவானாக".***

# பாடம்

## கேள்விகள்

## என் வாழ்க்கைத் துணையோடு பேசும்போது நான் என்ன சொல்வது?

*1. நம் வாழ்க்கைத் துணையோடு இசைந்திருப்பது தவிர்க்க முடியாததா? நாம் திருமணம் செய்து கொண்டதும் நமது வாழ்க்கை எப்படியாய் மாறிவிடுகிறது ? இசைந்திருத்தல் என்பது என் வாழ்க்கைத் துணைக்கு மட்டுமன்றி எல்லாருக்குமே பொதுவாய் என்ன செய்தியை சொல்கிறது? நம் வாழ்க்கைத் துணையை எப்படி நடத்த வேண்டும் என்று* ***யோசுவா 22:5*** *என்ன சொல்கிறது? (****ஆதி 2:23-25*** *வசனத்தையும் பார்க்கவும்).*

*2. சரீர ரீதியான ஈர்ப்பு அல்லது நமது உணர்ச்சிப்பூர்வமான விருப்பங்கள் நமது வாழ்க்கைத் துணையோடிருக்கும் உறவை எவ்வாறு மேம்படுத்துகிறது? இந்த உணர்வுகள் இந்த உறவை எப்படிப் பாதிக்கக்கூடும்? கட்டுக்கடங்கா உணர்வுகள் திருமணத்திற்கு ஒரு நல்ல ஆதாரமா? இந்த கட்டுக்கடங்காத உணர்வுகள் உடன்படிக்கைக்கு உட்பட்ட இந்தக் திருமணவாழ்வின் ஒரு அங்கமாக இருக்க வேண்டுமா? (****உன்னதப்பாட்டு 1:2 ; நீதி 5:18-20*** *-ஐ பாருங்கள்).*

*3. வாழ்க்கைத் துணையோடு நாம் கோபமாகவோ அல்லது விரக்தியில் இருக்கும் போதோ எப்படி பேசவேண்டும்? சமாதானத்தை கடைபிடிப்பது மற்றும் சமாதானத்தை உண்டாக்குவது என்கிற இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்ன? ஏன் இது முக்கியமானதாக இருக்கிறது? நாம் கோபமாக இருக்கும் போது எப்படியான வார்த்தைகளைப் பயன்படுத்தி நமது பதிலை சொல்லவேண்டும்? அவைகளை எப்படி முறையாக வெளியிட வேண்டும்? (****எபேசியர் 4:25-32*** *ஐ பார்க்கவும்).*

*4. கிறிஸ்தவ திருமணத்தில் கணவருக்கு உள்ளப் பொறுப்புகள்*

*என்ன? கிறிஸ்தவ திருமணத்தில் மனைவிக்கு உள்ள பொறுப்புகள் என்ன? நாம் ஒருவரை ஒருவர் எப்படிப் போற்றி, கௌரவித்து, உயர்வாய் மதித்து நடக்கவேண்டும்? ( **I கொரி:12:21-23; எபே:5:21-31; I பேது :3-7** ஐ பார்க்கவும்).*

*5. நம் வாழ்க்கைத் துணையோடு பேசுவதைக் கேட்கும் போது நமக்கு உண்டாகும் எண்ணங்களை நாம் ஏன் மதிப்பிட வேண்டும்? இது நமது உரையாடலுக்கு எப்படி உதவும் ? ஏன் இந்தப் பீலியா வகை அன்பு இந்த இடத்தில் அவ்வளவு முக்கியமானது? (**தீத்து: 2:2-4** ஐ பார்க்கவும்).*

*6. உறுதியான திருமணத்திற்கு ஆதாரம்/அஸ்திவாரம் எது? அகாபே அன்பு என்றால் என்ன? தேவன் இதை எப்படி விளக்கிச் சொல்லியிருக்கிறார்? இயேசு இதை எப்படி விளக்கிச் சொல்லியிருக்கிறார்? ஒரு கணவரான உங்களுக்கு **எபே:5:25** எதைச் சொல்வதாக கருதுகிறீர்கள் ? ஒரு மனைவியாக உங்களுக்கு **எபே: 5:25** எதைச் சொல்வதாக கருதுகிறீர்கள்? (**ஆதி 2:24; பிரசங்கி 4: 9-12; யோவான்:15:12** ஐ பார்க்கவும்).*

*7. நாம் ஒரு அசாதாரணச் சூழலில் இருக்கும் போதோ, அல்லது நம் துணையோடு உரையாடுவதற்கு சிரமப்படும் போதோ நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும்? பீலியா அன்பையே நமது திருமணத்தில் நம்மால் காண முடியாவிடில் என்ன செய்வது? இப்படியான சூழ்நிலையில் அகாபே அன்பு ஏன் அவ்வளவு தீவிரமானதாய் இருக்கிறது? (**மத்:5:43-44; லூக்: 16:10; ரோம :1:28,31; பிலி: 2:2-4; 2 தீமோ: 3:1-3** ஐ பார்க்கவும்).*

*8. அவர்களின் திருமண வாழ்க்கையில் இருந்து நாம் என்னப் பாடம் கற்றுக்கொள்ளலாம்? எந்த குணாதிசயங்கள் அல்லது பண்புகள் அவர்களது திருமணத்தை அவ்வளவு சிறப்பான முன்மாதிரியாக ஆக்கியிருக்கிறது? (**அப் :18: 1-3;25-26; ரோம: 16:3-5; 2 கொரி:16:19** ஐ பார்க்கவும்).*

*9. உங்கள் வாழ்க்கைத் துணையோடு நீங்கள் எப்படி உரையாடுகிறீர்கள்? மற்றும் கருத்து பரிமாற்றம் செய்கிறீர்கள் ?*

*உங்களது உறவின் மூலம் நீங்கள் பெற்றுக்கொணட ஆசீர்வாதங்கள் என்ன? உங்கள் வாழ்க்கைத் துணையோடான உரையாடலை அல்லது கருத்து பரிமாற்றத்தை இன்னும் அதிகமாய் கிறிஸ்துவைப் போன்றதாய் இருக்கும்படி எப்படி நீங்கள் செய்யமுடியும்?*

ஆமென்!

**(Christian Questions**

**– வலையொலிப் பதிவு – நிகழ்வு # 1216 – தமிழாக்கம் )**

புதுசிருஷ்டியின் பொக்கிஷசாலை

see more new booklets and Reprints at

www.foodfornewcreature.com